புதினப்பத்திரிகைகளாகப் பதிவுசெய்யப்பெற்றது

இந்துசாதனம்.

விரோதிஸு (1889) ஆவணிமீ உஅ ஸ்தாபனமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிக் கிரயம்.

யாழ்ப்பாணம் பட்டினம்: ஆண்டு 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,,	ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி: ,,	ரூ. 9-40
தனிப்பிரதி:	சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு:—	ஒருகலம்	ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு மேலே விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கள } யாழ்ப்பாணம்:—குரோதனஸு ஆவணிமீ உசுஉ; (1925 செப்டெம்பர் 10) வியாழக்கிழமை. { இலக்கம்—உ0

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன் றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

ருக்மணிகுக்கர் தான்.

கனம் எட்டையாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

அளவு	ஒருவர்	2	4	6	8 பேர்.
விலை	ரூபா 13.	18	22	27	33.

விபர புத்தகம் இலவசம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
(Y. 45.) இராயபுரம், மதராஸ்.

Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL
POTO-NOvO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும்
தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மகா யோகமான

சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! —o— அருமையானது!!

பரிக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இவ்வாழ்க்கையிலே நாம் என்றும் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சுகவிலைப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? எனவும் பலமுறையும் புகழ்வார்கள். ஆனுல் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே துர்நடத்தையால் வாய்ப்பட்டுக் கெட்டும், இன்னும் பலவித காரணங்களினாலும் தேகம் நிற்கு சத்தானமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன பிருதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினாலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், பித்தநாபகம் என்னும் ஓர்வித கொடிய நோயினால் எப்பொழுதும் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹநாங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோ தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடகர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேகக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். கர்ப்பசக்தியின் குறைபாட்டினால் ஏற்பட்ட பலவிதமான நோய்களினாலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிரசித்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணமசெய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமையக் குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனாம் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும் உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித திட்டமைகள் லேகியங்களையே சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் எமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. ஒரு முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனாம்.

40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	10—0—0
20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	5—0—0
பரிக்ஷைக்கு 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா	3—0—0

வி. பி தபால்செலவு முதலியன முழுபாகத்திற்கு அணு 12, அரைபாகத்திற்கு அணு 7, கால்பாகத்திற்கு அணு 5 / பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முற்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் இனாம்.

விசேஷகவனிப்பு:—பினாங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரிஸ் முதலிய வெளிப்பிரதேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முற்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பிய மருந்து பெறவேண்டும் எமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுராஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், எ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூனானி வைத்தியசாலை,
(Q. 63). பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. வ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனமாய் (1) அனுப்பப்படும்.

இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.
ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)
இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து
அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை ஒரு முறை பரிக்ஷை பாருங்கள்.

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் சிறந்தது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரிக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸப்பங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணப்படவில்லை. தங்கள் ஜீ வ மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம் வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி அருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்டி கொடுக்கப்படும்).

பிரமேக நிவாரணி

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், சூத்து உடனே தீரும் புட்டி ரூபா 2-0 0.

நற்சாட்சி:—கண்டி, சி. பீலான் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

புஷ்பிக ரோஸ் பற்பொடி

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும் பல்வலி, பல்லரணை, எகிர் கரைவு, வாய் நாற்றம், புழுப்பற்கள் முதலியவைகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாக்கெட் 1-க்கு ரூபா 2-0-0 வியாபாரிகளுக்கு 6 டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல் துலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேண்டுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சரீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப நோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும் ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினாங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2 ம் சேர்த்து முற்பணம் அனுப்பினல் மாத்திரம் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.
(Q 56. B.)

மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனல் அது சேர்ந்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினல் தைலம் செய்வது சுலபமே. விலையும் சரசமாகும்.—ஆனல் அது பொது ஜனங்கள் மனதிற்கு ஒப்பாது.

லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்

செய்வதில் இந்தத் துர்நாற்ற முடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்ததிருக்கிறது

5—L—35.



(Y. 41 c.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—குரோதன ௵
ஆவணி மீ ௨௯ வியாழக்கிழமை.

இக்காலத்தில் ஊட்டப்படுந் தமிழ்க்கல்வி—௨.

இனி, தமிழ் உபாத்தியாயர்களாயுள்ளவர்கள் மேலே சொல்லப்பட்ட வித்தியாதரிசிகளின் நிபந்தனைகட்கும் அபிப்பிராயங்கட்கும் அமைந்தே பிள்ளைகட்குக் கல்வி கற்பிக்கவேண்டிய நிலைமையில் இருக்கின்றார்கள். எத்தனையோ உபாத்தியாயர்கள் வருடாந்தப் பரீட்சையின் நோக்கத்தையும் வித்தியாபகுதியாரின் நிபந்தனைகளையும் விபரீதமாக விளங்கியிருக்கின்றார்கள். வித்தியாபகுதியார் தங்கள் நிபந்தனைப் புத்தகத்தில் இன்னின்ன வகுப்பிற்கு இன்னின்ன பாடம் படிப்பித்தல் வேண்டுமென விதித்திருக்கின்றார்களேயன்றி அந்நிபந்தனையில் விதிக்கப்பட்ட பாடங்களுக்கு மேலாக ஏதும் படிப்பிக்கலாகாதென்று கட்டுப்பாடு செய்யவில்லை. உபாத்தியாயர் வருஷம் முழுவதும் கற்பித்தவைகளையும் மாணாக்கர் வருஷம் முழுவதும் கற்றவைகளையும் வித்தியாதரிசிகள் சில மணித்தியாலத்திலே பரீட்சித்தல் முடியக்கூடிய காரியமன்று. மாணாக்கருடைய கல்வியறிவு எவ்வளவென்பதை அளந்தறிதற்கே வித்தியாதரிசிகள் வருடந்தோறும் பரீட்சைசெய்வர். இந்த உண்மையை அறியாத தமிழ் உபாத்தியாயர் அநேகர் வித்தியாபகுதியாரின் நிபந்தனைப் புத்தகத்திற் சொல்லப்பட்ட அளவிற்கே மட்டுமட்டாகப் படிப்பிக்கின்றனர். உதாரணமாக, நான்காம் வகுப்பிற் கல்விபயிலும் பிள்ளைகள் 15 செய்யுட்களை மனனம்பண்ணி ஒப்பித்தல்வேண்டுமென்று வித்தியாபகுதியாரின் நிபந்தனையிருந்தால் இந்த உபாத்தியாயர்களும் மூதுரையிலே 15 செய்யுட்களை மாத்திரம் படிப்பிக்கின்றனரேயன்றி அந்நூல் முழுவதையும் படிப்பிக்கின்றிலர்.

முற்காலத்திலே அரசினர் நன்கொடைப் பணம் பெறும் வித்தியாசாலைகளிலும் மூதுரை நிகண்டு முதலியவற்றை எட்டுப் பாடல்கள் என்ற பெயருடன் பிள்ளைகட்கு ஆசிரியர் நன்கு பயிற்றிவந்தனர். திருவாதவூரடிகள் புராணம் முதலிய செய்யுள் நடையிலுள்ள நூல்களை இராகத்தோடு வாசித்தற்கும் பதச்சேதஞ் செய்வதற்கும் அர்த்தம்பண்ணுவதற்கும் பயிற்றிவந்தார்கள். நமச்சிவாயமாலை கந்தரலங்காரம் குமரேசர் சதகம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களை சிறுவர்களைக்கொண்டு மனனம் பண்ணுவித்து வந்தார்கள். இவைகளோடு கணக்கு பூமிசாஸ்திரம் சுகாதாரம் வசனபாடம் எழுத்து முதலிய பரீட்சைக்குரிய பாடங்களையும் ஆசிரியர்கள் பிள்ளைகட்குப் பயிற்றிவந்தார்கள். ஆனால் இப்பொழுது எத்தனையோ சைவ வித்தியாசாலைகளில் மேலே சொல்லப்பட்ட எட்டுப் பாடங்களும் பிறவும் பயிற்றப்படாது வித்தியாதரிசிகளின் வருடாந்தப் பரீட்சைக்குரிய பாடங்கள் மாத்திரம் மட்டுமட்டாகப் படிப்பிக்கப்படலாயின. சமயபாடங்கள்தானும் சில சைவவித்தியாசாலைகளிற் படிப்பிக்கப்படக் கண்டிலேம். பண்ணோடு தேவாரஞ் சொல்ல வல்ல சைவப் பிள்ளைகளைக் காணுதல் அபூர்வமாகிவிட்டது. இக்காலத்திலே மாணாக்கருட் பலர் செய்யுட்களை இசையின்றி வசனமாகவே வாசிக்கின்றார்கள்.

வித்தியாசாலைகள் பெரும்பான்மையும் வியாபார நோக்கமாகத் தொடங்கப்பட்டனபோற் காணப்படுகின்றனவன்றி உண்மையான தமிழ்க் கல்வியைச் சிறுவர்க்கு ஊட்டும்படி ஆரம்பிக்கப்பட்டனபோற் காணப்படவில்லை. உபாத்தியாயர்களென் றிருப்பவர்கள் பிள்ளைகளைப் பரீட்சையிலே சித்தியடையச்செய்து அதுவாயிலாகத் தங்கள் வேதனத்தைக் குறைவின்றிப் பெற்றுக்கொண்டால்மாத்திரம் போதுமென்ற எண்ணத்துடன் கடமை செய்யலொண்ணாது. எங்கள் தாய்ப்பாஷை குன்றி வரும் இக்காலத்தில் அதனைக் குன்றவிடாது விருத்திசெய்தல்வேண்டுமென்ற நோக்கத்துடன் உழைத்தல்வேண்டும். வித்தியாசாலை அதிகாரிகளென் றிருப்பவர்களும் தாம் எடுத்துக்கொண்ட வித்தியாதானமாகிய இச்சற்கருமத்தினால் தமிழகத்தார் மிக்க நன்மையடைதல்வேண்டுமென்ற நோக்கத்துடன் உழைத்தல்வேண்டும். வங்காளதேசத்திலே ஆங்கிலபாஷை விருத்தியடையத் தொடங்கிய பின்னரே அத்தேசத்தாரின் சுதேசபாஷையாகிய வங்காளப்பாஷையும் நன்கு விருத்தியடையலாயிற்று. ஆதலினாலே தமிழ் விருத்தியடைவதற்கு ஆங்கிலம் எவ்வாற்றானும் இடையூறாக நிற்கமாட்டாது.

தமிழகத்தாரென் றிருப்பவர் ஒவ்வொருவரும் தங்கள் பிள்ளைகட்குத் தமிழ்க்கல்வியறிவை நன்கு ஊட்டல்வேண்டுமென்ற மேலான நோக்கம் பூண்டவர்களாகவேயிருத்தல்வேண்டும்.

இனி, இக்காலத்திலே சீவனார்த்தமாக அதிகம் பொருள் செலவிட்டு ஆங்கிலங் கற்பதனால் வரும் பயன் யாதுமில்லையாம். ஏனென்றால் ஆங்கிலங் கற்றவர்கட்கு உத்தியோகம் பார்த்துப் பிழைத்தற்கு இடமில்லை. ஆதலால் ஆங்கிலமும் இனிமேல் அறிவு விருத்தியின்பொருட்டு மாத்திரம் படிக்க வேண்டிய பாஷையாய்விட்டது. அவ்வாறே தமிழ்ப்பாஷையையும் இனிமேல் அறிவு விருத்தியின்பொருட்டு அபிமானத்தோடு அதிக பொருட்செலவின்றிப் படித்தல் முடியுமே! தமிழ்க்கல்வி அபிவிருத்தியாக வேண்டுமென்ற நோக்கம் வித்தியாபகுதியாருக்கும் ஊரவர்கட்கும் இருக்குமாயின் பழைய முறைப்படி தமிழ்க்கல்வியைச் சிறுவர்கட்கு ஊட்டுதல் ஆவசியகமாகும். மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தார் என்னும் இச்சங்கத்தவர்கள் வருடந்தோறும் விதித்து நடாத்தும் பரீட்சைகளிற் சித்தியடைதல்வேண்டுமென்ற நோக்கமும் எங்கள் சிறுவர் சிறுமியர்களின் உள்ளத்தில் உதித்தல்வேண்டும்.

யாழ்ப்பாணப்பட்டின பரிபாலன சங்கம்.

பட்டின பரிபாலன சங்கத்தின்

எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக

ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை

(மாமாத்தம்பி)யைத்

தயவுசெய்து

தெரிவு செய்யுங்கள்.

(Q 66)

சுந்தரமூர்த்திநாயனாரும் சேரமான்பெருமாணாயனாரும்.

தில்லைச்சிதம்பரத்திலே தினந்தோறும் குஞ்சிதபாத நடராசப்பெருமானைத் தரிசித்துக்கொண்டிருக்கும் சேரமான்பெருமாணாயனாருக்குச் சுந்தரமூர்த்திநாயனாரைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராவலுண்டாயது. அவர் வழியிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாரூரையடைந்து எமது சமயகுரவரது தரிசனம் பெற்றார். இருவரும் அத்தியந்த நண்புடையராயினர். அதுகாரணமாக எமது தம்பிரான் தோழருக்குச் “சேரமான் தோழர்” என்னும் விசேடநாமமுண்டாயது. இருவரும் வன்மீகநாதரைத் தரிசித்துக்கொண்டு பரவையார் திருமாளிகையில் வீற்றிருந்தார்கள். இருமெய்யடியார்களும் அங்கிருந்து புறப்பட்டுத் திருநாகைக்காரோணம் திருமறைக்காடு முதலான சிவஸ்தலங்களை வணங்கிக்கொண்டு இராமேச்சுரத்தையடைந்தார்கள். எமது சமயகுரவர் அங்கிருந்தவாறே இலங்கையிலுள்ள [illegible] திருக்கேதீச்சரத்தைத் தரிசித்து “நத்தார்படைஞானன்” என்னுஞ் சொற்றொடரையுடைய தேவாரத்திருப்பதிகம் பாடியருளினார். பின்னர் இருவரும் திருச்சுழியல் என்னும் ஸ்தலத்தில் தங்கியபோது சிவபெருமான் எமது சமயகுரவரது சொப்பனத்திற் றோன்றி “நாமிருப்பது கானப்பேர்” என அருளி மறைந்தார். நாயனார் உடனே விழித்தெழுந்து தாம் கண்ட கனவைச் சேரமான்பெருமாணாயனாரிடம் கூறிப் புறப்பட்டுக் கானப்பேரையடைந்து “தொண்டரடித்தொழலும்” என்னுஞ்சொற்றொடரையுடைய திருப்பதிகம்பாடியருளினார். பின்னர் இருவரும் திருவையாற்றைத் தரிசிக்க விரும்பிப் புறப்பட்டுச் சென்றார்கள். காவிரிநதி பெருகிக் கரைபுரளுதலால் எமது தம்பிரான்தோழர் “பரவும்பரிசொன்றறியேன்” என்னுஞ் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடுதலும் காவிரிநதி இருகூறுபட்டுப் பிரிந்து வழிவிட்டு நின்றது. அதன்பின் சேரமான்பெருமாணாயனார் சுந்தரமூர்த்திநாயனாரைத் தமது நாட்டிலுள்ள திருவஞ்சைக்களத்துக்கு அழைத்துச் சென்றார்.

தலையன்புடையாராகிய சேரர்பிரான் எமது சமயகுரவரைத் தமது இராசதானியிற் சகல வரிசைகளுடன் நல்வரவேற்றார்; உயர்ந்தபீடத்தி லெழுந்தருளச்செய்தார்; அவரது பாதங்களை நறுமலர் கொண்டு அருச்சித்தார்; பெறற்கரிய பேறு பெற்றாற்போன்று பேரானந்தமடைந்து அமிழ்தினுமினிய விருந்தளித்தார். தம்பிரான் தோழர் அங்கு சிலகாலம் வசித்தலும் திருவாரூர் வன்மீகநாதரைத் தெரிசிக்கவேண்டுமென்னும் பேராவல் அவருக்குண்டாயது. அவர் அங்கிருந்தவாறே “பொன்னுமெய்ப்பொருளும்” என்னுஞ் சொற்றொடரையுடைய திருப்பதிகம் பாடியருளினர். நாயனார் அங்கிருந்து திருவாரூருக்குப் புறப்பட்டார். சேரமான் பெருமாணாயனார் தம்மிடத்துள்ள திரவியங்களையெல்லாம் ஆட்கள்மீது சுமத்திச் சுந்தரமூர்த்திநாயனாருக்கு முன்னே கொண்டுசெல்லும்படி செய்தார். அவர்கள் திருமுருகன்பூண்டியை அடைந்தார்கள். சிவபெருமான் ஆங்கோர் திருவிளையாடல் செய்யவேண்டி “சுந்தரனுடைய பரிசனங்கள் கொண்டுசெல்லுந் திரவியங்களை நீங்கள் வேடுவராகச் சென்று கவருதிர்” எனத் தமது கணநாதருக்கு ஆஞ்ஞாபித்தருளினர். கணநாதர் வேடுவராகிச் சென்று திரவியங்களைக் கவர்ந்துசென்றார்கள். பரிசனர் நிகழ்ந்த சமாசாரத்தைச் சுந்தரமூர்த்திநாயனாருக்கு முறையிட்டார்கள். நாயனார் திருமுருகன்பூண்டியென்னும் ஆலயத்தட்புகுந்து “கொடுகு வெஞ்சிலை” என்னுஞ் சொற்றொடரையுடைய தேவாரத் திருப்பதிகம் பாடியருளினர். அப்பாடலில் இத்துணை அக்கிரமம் புரியும் வடுக வேடுவர் வசிக்கும் இந்த இடத்தில் எம்பிரானே, நீர் ஏனிங் கிருக்கின்றீரெனக் குறிப்பிட்டருளினர். அப்பதிகத்துள்ள பாடல் ஒவ்வொன்றின் ஈற்றிலும் “எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே” எனக் குறிப்பிட்டனர்.

சிவபெருமானுடைய திருவருளினாலே வேடுவர்கள் தாங்கள் அபகரித்த திரவியங்களையெல்லாம் திருமுருகன் பூண்டியென்னும் ஆலயத்திருவாயிலிற் கொண்டுபோய்க் குவித்தார்கள். எமது சமயகுரவர் அவற்றையெல்லாம் சுமையாட்கள் மீது அமைத்துக்கொண்டு திருவாரூருக்குச் சென்றார். அவர் தினந்தோறும் வன்மீகநாதரைத் தரிசித்துக்கொண்டு பரவையாருடைய திருமாளிகையில் வசித்து வந்தார். இவ்வண்ணமாக நாட்கள் சில கழிந்தன. தம்பிரான்தோழர் சேரமான் பெருமாணாயனாரிடம் அத்தியந்த நண்புடையராகையினால் அவரை விட்டுப் பிரிந்தமைபற்றிப் பெரிதும் வருந்தினர். “அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்” என்றனர் பெரியார். எனவே எமது சமயகுரவர் அவரைவிட்டுப்பிரிந்திருக்குமாற்றலில்லாதவராகிச் சேரநாட்டுக்குச் செல்ல விரும்பினர். அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சோழமண்டலத்தைக்கடந்து கொங்கநாட்டையடைந்தாரென்பதாம்.

திருக்கோயிலும் பிராயச்சித்தமும்.

திருக்கோயிலொன்றுக்குச் சமீபமாயுள்ள இடத்திலே ஒருவர் இறந்தாரென்றும், அதன்பொருட்டு ஆலயத்திற் பிராயச்சித்தம் செய்தபின்னரே பூசை செய்யவேண்டுமென்று அவ்வாலய அருச்சகர் கூறினாரென்றும், குறித்த ஆலய அதிகாரி அவ்வருச்சகர் பொருள்வரவை விரும்பி அங்ஙனம் கூறுகின்றாரென்று சொல்லிப் பூசையை நடாத்தும்படி வற்புறுத்தினாரென்றும், அதற்கு அருச்சகர் இணங்காராக, பிரேதத்தை அந்த வீட்டிலிருந்து சிறிது தூரத்தே அகற்றிப் பூசை செய்யுமாறு அருச்சகரை வலாற்காரப்படுத்தினாரென்றும், ஈற்றில் அதிகாரியுடைய கோளின்படி அருச்சகர் பூசை செய்யநேர்ந்ததென்றும் வரைந்துள்ள கடிதம் ஒன்று எமக்கனுப்பப்பட்டிருக்கிறது. சில ஆலயங்களிலே அருச்சகரும், சிலவற்றில் அதிகாரிகளும் இதுபோன்ற சில குற்றங்களைப் புரிகின்றார்களென்பது உண்மையே. புரோகிதரொருவர் தமது சீடரை நோக்கி ‘உமது புத்திரிக்கு ஆவசியகம் விவாகம் செய்துவைக்க வேண்டு’மென்று கேட்குமிடத்து “உமது வருவாயை நோக்கித்தானே நீர் கேட்கின்றீர்” என்று சீடன் கூறவொண்ணாது. அதுபோலவே ஆலயத்துக்குச்சமீபமான இடத்தில் ஒருவர் இறந்துவிட்டால் வருவாயை விரும்பிப் பிராயச்சித்தம் செய்ய அருச்சகர் முயலுகின்றாரென்று கூறவொண்ணாது. பிராயச்சித்தம் செய்தே தீரவேண்டும். குறித்த எல்லைக்குள் மரணம் நிகழ்ந்தால் பிரேத நீக்கம் செய்தபின்னரும் பிராயச்சித்தம் செய்தே பூசைசெய்தல்வேண்டும். அதுவேண்டிய தில்லையென ஒரு அதிகாரி சொல்வாராயின் அவருக்கு அப்பதவி கிடைத்தமை பற்றியே நாம்பெரிதும் வருந்துவேம்.

மாத்துறைத் தமிழர் சங்கம்.

இச்சங்கம் கதிர்காம யாத்திரையின் பொருட்டு மாத்துறை மார்க்கமாகச் சென்ற அடியார்களுக்குச் செய்துள்ள அரும்பெருந் திருத்தொண்டைப்பற்றி இற்றைக்குச் சில வாரங்களுக்கு முன் வெளியிட்டுள்ளோம். இத்திருத்தொண்டிற்குப் பொருளுபகரித்த தருமசீலர்களுடைய நாமமும் தொகையும் வரையப்பட்டுள்ள அட்டவணையொன்று எமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சமயபேதஞ் சிறிதுமின்றி நூற்றுமுப்பத்து நான்கு தனவான்கள் 50 சதம் தொடக்கம் 50 ரூபா வரை உபகரித்திருப்பதை அவ்வட்டவணை காட்டுகின்றது. குறித்த தனவான்களின் பெயரையும் தொகையையும் பிரசுரிப்பதற்கு எமது பத்திரம் இடந்தராமைபற்றி வருந்துகின்றோம். இச்சங்கமும் இது செய்துள்ள திருத்தொண்டின் பொருட்டுப் பொருளுதவிசெய்த அன்பர்களும் கலியுகவரதராகிய கதிர்காமத்தையனது திருவருளைப் பெற்று உய்வார்களாக.

உலகம் பலவிதம்.

“அண்ணே, காற்சட்டை தொப்பி சப்பாத்து என்னும் அயிரோப்பிய உடைகளை அணிந்துகொள்ளவொண்ணாது, எங்கள் சாதிக்குரிய உடையாகிய வேட்டி சால்வை உடுத்திக்கொள்ளுதல் வேண்டுமென்று [illegible] இராசரத்தினமவர்கள் சட்டநிரூபணசபையில் வாதாடுகிறார்; ‘இந்துசாதன’ப் பத்திரிகையிலும் இங்குள்ள மற்றும் பத்திரிகைகளிலும் சட்டை தொப்பி சப்பாத்தை விடுதல்வேண்டும், சாதிக்குரிய உடை தரித்தல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது; இதைப்பற்றி உங்களுடைய எண்ணமென்ன” என்று சரவணமுத்து என்பவர் நமது முருகேசுவைச் சந்தித்தபோது வினாவினார். முருகேசு “அது நல்ல முயற்சியென்றுதான் நான் நினைக்கிறேன்” என்றார். “என்ன, அண்ணை, அதிக அனுபவமும் அறிவும் உடைய நீங்களும் இப்படிச்சொல்லுகிறீர்களே; சட்டை தொப்பி போட்டுக்கொள்ளாவிட்டால் இந்தக் காலத்தில் மதிப்பில்லையே; படித்தவராயிருந்தாலென்ன, படியாதவராயிருந்தாலென்ன, பெரியவராயிருந்தாலென்ன, சிறியவராயிருந்தாலென்ன, உயர்ந்தவராயிருந்தாலென்ன, தாழ்ந்தவராயிருந்தாலென்ன அயிரோப்பிய உடையோடு போனால் அவரைத் துரை, துரை, மாத்தையா என்று அழைத்து வெகுமரியாதைசெய்கிறார்கள்; புகைரதஸ்தானத்திலே பிரயாணச் சீட்டுப்பெற்றுக்கொள்ளும்படி, சுவரிலேயுள்ள அந்தத்துவாரத்தினுள்ளே சட்டைபோட்ட கையோடு காசை நீட்டினால், அதற்கு முந்திநீட்டிய சட்டைபோடாத கைகளைப்பொருட்படுத்தாது, இந்தச் சட்டைபோட்ட கைக்கே உடனே பிரயாணச் சீட்டுக்கொடுக்கப்படுகின்றது; அதிகந் தூரத்திற்கேன்போகவேண்டும், என்னுடைய மருமகனொருவனிருக்கிறான், அவனுக்குப்படிப்பில்லை; முயற்சியில்லை, தெருவழியே திரிகின்றான்; ஆனால் கிழிந்தவைகளாயிருந்தாலும் ஊத்தையாயிருந்தாலும் காற்சட்டை சப்பாத்தின்றி வெளியிலே புறப்படமாட்டான். அவனுக்கு நடக்கும் மரியாதையில் நூற்றிலொன்றுமெனக்கில்லை; இனிவெள்ளைக்காரருக்குச் சட்டை தொப்பி போட்டவர்களிலேதான் பிடிப்பு என்று சொல்லுகிறார்கள்; இப்படியெல்லாமிருக்க, நீங்கள் அயிரோப்பிய உடைவேண்டாமென்று சொல்லுகிறீர்களே” என்றார் சரவணமுத்து.

* * *

அதனைக்கேட்ட முருகேசு நகைத்து “அப்படியல்ல, அயிரோப்பிய உடைக்கு மரியாதையைக் கொடுத்தவர்களும் எங்கள் சாதிய உடைக்குரிய மரியாதையைக் கெடுத்தவர்களும் நம்மவர்களேயாவர். எங்கள் தாய்நாடாகிய இந்தியாவிலே தக்க உத்தியோகத்தவர்களெல்லாரும் சுதேச உடையையே தரித்துக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்குக்கீழ் எத்தனைபேர் வெள்ளைக்காரர் கடமை பார்க்கின்றார்கள். மேலுத்தியோகத்தர்களாயுள்ள இந்தியர்களுக்குத் தங்கள் உடைகாரணமாகயாதும் மதிப்புக்குறைந்துபோவதில்லை. சுதேசிகள் அயிரோப்பிய உடையைத் தரித்துக்கொண்டுசெல்லுதல் அயிரோப்பியருக்கு வெறுப்பாகவிருக்கின்றது. சில அயிரோப்பியர் இப்படிப்பட்ட சுதேசிகளைப்பார்த்து “நீங்கள் எங்கள் உடையைத் தரித்து எங்களைப் பரிகாசஞ் செய்கிறீர்கள்” என்று நேரே சொன்னதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். சில வருடங்களுக்குமுன்னர் மகாத்மாகாந்தி இந்திய பிரதிகாவலரால் அரசியல் விஷயமாகக்

(ஐந்தாம் பக்கம் பார்க்க)

தானவரவு.

ஓர் அபிமானி தமது குழந்தைக்கு அன்னப்பிராசனஞ் செய்த சமையத்தில், யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக்கு வரித்தனுப்பிய ரூபா இரண்டு பெற்றோம்.

நீர்கொழும்புப் பட்டின பரிபாலன சங்கத்தின் பயனற்ற கூட்டம்

சென்ற செவ்வாய்க்கிழமை இச்சங்கத்தின் கூட்டமொன்று நிகழ்ந்தது. அப்பட்டினபரிபாலனசங்க அங்கத்தவர் ஒருவருக்கு விரோதமாக அனுப்பப்பட்ட ஒரு மனுவை ஷெ சபையில் வெளியிடாமையினால் அங்கத்தவர்களுக்கிடையில் அதிக மனஸ்தாபம் உண்டாயது. இதன் காரணமாக அங்கத்தவர் இருவர் சங்கமண்டபத்தைவிட்டு வெளியே சென்றார்கள். நிருவாகத் தொகை (கோறம்)க்கு அங்கத்தவர் போதாமையினால் அக்கூட்டம் பயனற்றுக் கலைந்தது.

வல்வைச் சைவவாலிப சங்கம்.

நிகழும் குரோதனவரு ஆவணிமீ 21உ (5—9—25)சனிக்கிழமைபிற்பகல் 7 மணியளவில் ஷெ. சங்க ஆதரவின்கீழ், சங்க மண்டபத்தில் ஸ்ரீ கா. கந்தசாமி அவர்களால் அருணகிரிநாத சுவாமிகள் சரித்திரம் பக்கவாத்திய சகிதமாய்ப் பிரசங்கஞ் செய்யப்பட்டது. 150 பேர் வரையிற் சமுகமாயிருந்தனர். பிரசங்கம் பத்தரை மணியளவில் முடிவெய்தியது. இச்சங்கத்தின் 7-ம் வருடாந்தக் கூட்டம் நிகழும் ஆவணிமீ 28உ (12-9-25) சனிக்கிழமை பிற்பகல் 7 மணியளவில் ஆரம்பமாகும். அப்பொழுது அரிய பெரிய சமய விஷயங்கள் பிரசங்கிக்கப்படும்.

கடித.

விற்றகாணியை மீண்டும் விற்க முயன்றமை.

ஹென்வலா என்னுமிடத்திலுள்ள மிஸ்றர் ஜே. ச. அமரசேகரா என்னும் தோட்டத் தலைவர் ஒருவர் மிஸ்றர் வன்டர் பூட்றன் என்பவருக்குத் தனது திருவததை என்னுந்தோட்டத்தை ஈடாகக் கொடுத்துப் பணம் பெற்றிருந்தார். இக்கடனுக்காக அத்தோட்டம் பிரசித்த ஏலத்தில் விற்கப்பட்டது. மிஸ்ரர் வன்டர் பூட்றனே அதனை வாங்கினர். சென்றமேமீ [illegible] ஷெ அமரசேகரா என்பவர் அக்காணியை மேன்மாகாண ஏசன்றவர்களுக்கு இரண்டாம் முறையும் விற்று அதன் கிரயமாக 4,202 ரூபா 49 சதம் பெற முயன்றாரென்று இரகசியப் பொலிசாரால் கொழும்புப் பொலிஸ்கோட்டிலே அவர்மீது ஓர் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

விவாகம் குழம்பியமையினால் பழிசாதிக்கப்பட்டமை.

சிலாபத்துக்குச் சமீபமாயுள்ள கொத்தாமுல்லா என்னுமிடத்திலே சந்தியாகு பேர்னன்டோ என்னும் வாலிபன் ஒருவனுக்கும் அங்குள்ள ஜேன் என்னும் ஒரு கன்னிகைக்கும் விவாக ஏற்பாடு (மணமகளின் பெற்றாருடைய சம்மதியின்றிச்) செய்யப்பட்டிருந்தது. பெற்றார் தங்கள் மகளை அதற்கு இசையவிடாது தடுத்துத் தம்வசப்படுத்தி, வேறோர் பெண்ணை விவாகம் செய்து கொடுக்க விரும்பினார்கள். இதனையறிந்த பெண்ணின் பெற்றாருக்கு அதிக மனஸ்தாபமும் ஆத்திரமும் உண்டாயின. அவர்கள் குறித்த பேர்னன்டோ என்பவனுக்கு இடர் விளைப்பதற்கு ஓர் நயவஞ்சகவழியிற் புகுந்தார்கள். குறித்த வாலிபனுக்கும் அப்பெண்ணின் சகோதரனாகிய ஜேம்ஸ் என்பவனுக்கு மிடையே சிறிது சிநேகமுண்டு. ஜேம்ஸ் என்பவன் அந்தப் பேர்னன்டோ என்பவனைத் தன்வீட்டிற்கு வரும்படி நட்புமுறையில் அழைத்தான். வாலிபனும் நண்பன் அழைத்தமையினாலும், தன்னுள் ஏதோர்றத்தை இன்னுமொருதரம் காணும் நோக்கத்தினாலும் அங்கே சென்றான். அப்பொழுது ஜேம்ஸ் என்பவன் தன் சகோதரியை விவாகம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தினன். அந்த இடத்துக்கும் சமையத்துக்கும் தக்கவிதமாகப் பேசிக்கொண்டு. திரும்பி "லாமென நினைந்த பேர்னன்டோ சரியா" விடைகூறாது நின்றான். ஜேம்ஸ் என்பனும் அங்குள்ளோர்சிலரும் அவனுடன் தர்க்கமிட்டுக் கைகளாற்றாக்கினர். அதன்பின் எல்லோரும் அவனைப்பிடித்துக்கட்டி "வீடுடைத்து 138 ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடினான்" என்று ஓர் பொய் வழக்கைச் சிலாபத்து டிஸ்திரிக் கோட்டிற் றொடர்ந்தார்கள். அவ்வழக்குச் சென்ற வெள்ளிக்கிழமை விசாரணைசெய்யப்பட்டது. நீதிபதி அவ்வழக்கின் இரகசியம் முழுவதையும் நன்றாக விசாரணை செய்து உண்மையை அறிந்து எதிரியை விடுதலையாக்கினர்.

உபதேசியாரின் தற்கொலை.

இந்த செப்டெம்பர்மீ 2உ புதன்கிழமை மாத்துறைக்குச் சமீபமாயுள்ள அக்குராசி என்னுமிடத்திலே உவெஸ்லியன் மிஷனைச்சேர்ந்த பேர்னன்டோ என்னும் உபதேசியாரொருவர் மனைவிமீது கொண்ட மனஸ்தாபங்காரணமாக நஞ்சுண்டிறந்தனர். நஞ்சுண்பதற்குமுன் மனைவியே தான் தற்கொலை செய்தமைக்குக் காரணமென்று ஒருகடிதமும் எழுதிவைத்தனர்.

கப்பிறீங்கோட்டுச்சிரேஷ்ட நீதிபதி தற்கொலை செய்தமை.

சென்ற திங்கட்கிழமை [illegible] இராச்சியப்பகுதிச் சிரேஷ்ட நீதிபதியாகிய சேர். லயனல் மாப்றட் [illegible] அவர்கள் தம்மைத்தாமே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டனர். இவர் தமது சுகயீனங்காரணமாகச் சென்ற சிலவாரம் கோலாலம்பூர் வைத்தியசாலையிற் றங்கி இங்கிலாந்திற்குப்போகப்புறப்படும்போது நோய் அதிகமாக வருத்தியமையினால் இவ்வாறுசெய்தனரென்று சொல்லப்படுகிறது.

பன்னிரண்டு நாட்களின்பின் வெளிவந்த பிரேதம்

சென்ற ஆகஸ்ட்மீ 20உ மாக்கனையிலே நான்கு வயதுக்குழந்தையொன்று மாயமாய் மறைந்தது. இந்தச் செப்டெம்பர்மீ 1உ றப்பர்த் தோட்டமொன்றிற் புல்லு வெட்டிய கூலியாட்கள் பற்றைமறைவிலே அக்குழந்தையின் பிரேதம் கிடக்கக்கண்டார்கள். மண்டையில் ஒரு காயமிருந்தது. அக்காயம் தவறிவீழ்ந்தமையினால் அல்லது அடியினால் ஏற்பட்டிருக்கவேண்டுமென்று பிரேதவிசாரணைத் தலைவர் கூறினர்.

வேடரின் கூத்தும் பாட்டும்.

சிலநாட்களுக்குமுன் எமது பிரதிதேசாதிபதியவர்கள் அநுராதபுரமென்னுமிடத்தைத் தரிசித்தபோது அங்குள்ள றற்றமாத்தையா ஒரு 'பெறஹற'க் கொண்டாட்டம் நடத்தினர். தேசாதிபதியவர்கள் அங்கு யானைமீதமர்ந்து சென்றனர். வேறும் அநேக யானைகள் வரிசையாகச் சென்றன. விந்தனையிலுள்ள வேடர் அநேகர் கூட்டங் கூட்டமாக அங்குச் சென்றார்கள். அவர்களுள் ஐம்பது பேர் புதுமாதிரிப் பாட்டுகளைப் பாடிக் கூத்தாடினார்கள். அவர்களுடைய பாட்டும் கூத்தும் தேசாதிபதியவர்களுக்கும் பிறர்க்கும் அதிவிநோதமாகவிருந்தன.

இரு பெண்களும் ஒரு சிறுவனும் கொல்லப்பட்டனர்.

பலப்பிட்டிக்குச் சமீபமாயுள்ள ஐம்பிட்டியிலே கிரிகாமி என்னுமொருவன் தன்னுடைய தோட்டத்திலுள்ள பாக்குக் களவுபோனதினால் அயலில் வசிக்கும் சோமாலியா என்னுஞ்சிறுவன் ஒருவன்மீது சந்தேகமுற்று அவனிடம் சென்று தர்க்கமிட்டான். சோமாலியா என்பவன் அக்களவைப்பற்றித் தனக்கு யாதொன்றுந் தெரியாதென்று கூறினன். இருவருக்குமிடையிற் கலகமுண்டாயது. இருவரும் கலகம்பிடிக்கும்போது சோமாலியாவின் மருமகனாகிய சேற்றுவா என்பவன் தன்மாமனுக்கு உதவிபுரியும்படி அங்குச்சென்றான். கிரிகாமி என்பவன் தனது கத்தியைப்பிடுங்கி சேற்றுவா என்பவனைப் படுகாயப்படுத்தினன். சேற்றுவா அந்த இடத்தில் அப்பொழுதே உயிர் விட்டான். இதனைக் கண்ட சோமாலியா தனக்கும் ஆபத்து நேரக்கூடுமென நினைத்து அருகேயுள்ள ஒரு வீட்டுக்குள் ஓடி மறைந்தான். கிரிகாமியும் அவனைப் பின்தொடர்ந்தான். அந்த வீட்டில் வசிக்கும் காறு என்னும் ஒருபெண் குறித்த கிரிகாமியை வீட்டினுள் நுழையக்கூடாதென எச்சரித்தனள். இப்பெண் கூறியவார்த்தையினால் கிரிகாமி அதிக கோபங்கொண்டு அவளைப் பன்முறை படுகாயப்படுத்தியபின் சோமாலியாவை வீட்டினுட் புகுந்து தேடினன். அவன் மறைந்திருந்த இடத்தைக் கிரிகாமி காணாமையினால் வீட்டைவிட்டுப் புறப்பட்டு முன்னமே கொலைசெய்துள்ள சேற்றுவா இறந்துகிடக்கும் இடத்தை அடைந்தான். அப்பொழுது இறந்துகிடக்கும் சேற்றுவாவின் தாயும் பேத்தியும் பிரேதத்தின் பக்கத்திற் புலம்பிக்கொண்டிருந்தார்கள். கிரிகாமி என்பவன் இப்பெண்களிருவரையும் படுகாயப்படுத்தியபின் அவ்விடத்தைவிட்டு அகன்றான். பொலிசார் அவ்விடத்துக்குச் சென்று படுகாயப்பட்ட பெண்கள் மூவரையும் வைத்தியசாலைக்கு அனுப்பினார். அவர்களுள் இருவர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்ட சிறிதுவேளையில் உயிர் துறந்தனர். எதிரி பொலிசாரால் பிடிக்கப்பட்டனன். அவன் தான் கொலைசெய்தமையைப்பற்றிய விஷயம் முழுவதையும் ஒப்புக்கொண்டான்.

கடிதம்.

கோபமே சத்துரு பொறுமையே பூஷணம்.

(வண்ணார்பண்ணை
ஸ்ரீமதி. க. நவரத்தின அம்மாள்
எழுதியது)

"தன்னைத்தான்காக்கிற் சினங்காக்கக்காவாக்
தன்னையே கொல்லுஞ் சினம்". [குறள்

அன்பார்ந்த சகோதரிகாள்,

பெரும்பாலும் நம்முடைய வாழ்வுந் தாழ்வும் பொறுமையிலேயே தங்கியிருக்கின்றதெனக் கூறல் பொருந்தும். ஏனெனில் கோபத்தை எவன் ஆதரிக்கிறானோ அவனே தாழ்ந்தவன். கோபம் சத்துருவென எவன் விலக்கிவைத்துப் பொறுமையை அநுசரிக்கிறானோ அவனே உயர்ந்தோன். ஆதலால் கோபம் மிகவும் கொடியது. அது ஒருவனை எவ்வித இடருக்கும் ஆளாக்கவல்லது. அவ்விதக் கோபத்தை, அநுசரித்தப் பின் விலக்குவதென்றால் இலகுவன்று. மூங்கிலிற் பிறக்கும் நெருப்பானது, அம் மூங்கிலையடியோடழித்துவிடுவது போலவே, நம்மிடமிருக்கும் கோபமும் நம்மையடியோடழித்துவிடுமென்பதற் கையமில்லை. அதுபற்றியே கோபம் பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தையெனப் பெரியோர் கூறினர்.

'உள்ளங்கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்
துக், கொள்ளுங்குணமே குணமென்க—வெள்
ளம், தடுத்தலரிதோ தடங்கரை தான்பேர்த்து
விடுத்தலரிதோ விளம்பு.'

வெள்ளத்தை எவ்விதம் தடுத்தலரிதோ, அவ்விதமே கோபத்தையடக்குவதும் கஷ்டமாம். ஆதலால் நாம் ஒருபோதுங் கோபங் கொள்ளலாகாது. அக்கினியை நீர்கொண்டவித்தல் போலவே, பொங்கி யெழுங் கோபத்தைப் பொறுமை யென்னும் நீர் கொண்டவித்தல் வேண்டும். இதுவே சான்றோர் செயல். சற்குணமுடையோர்க்கும் சிற்சில சமையம் கோபம் வருதலுமுண்டு. ஆனல் அவர் தம் அறிவால் அக் கோபத்தை யடக்கிக்கொள்வார். அதுபற்றியே, 'நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்' "நீர் கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே, சீர்கொண்ட சான்றோர் சினம்" எனவும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

எவனொருவன் நல்லவனாக விருக்க விரும்புகிறானோ அவன் [illegible] கோபத்தை நீக்கல் [illegible] மற்றும் நற்குண நற்செய்கை [illegible], அவனிடம் கோபமிருக்குமாகில் அவன் ஒருபோதும் நன்மையடையவே மாட்டான்.

'உள்ளியவெ லாமுட னெய்தும் உள்ளத்
துள்ளான் வெகுளியெனின்' [குறள்

நாம் கோபத்தை நீக்குவோமாகில் இம்மை மறுமை யிரு பயன்களையு மடைவோம். "நான்" என்ற அகங்காரம் கொள்கிறவனிடமே கோபம் அதிகரிக்கும். ஒருவனிடம் கோப முண்டேல், அவன் எவ்வித கொடிய செய்கைகளையும் செய்யப் பின்நிற்க மாட்டான்.

நமக்குப் பொறுமையே இன்றியமையாது வேண்டியதாகும். அதுவே நம்மைக் காக்கவல்லது. அஃதின்றேல் நமக்கு இம்மை மறுமைப் பயன்களுமின்றாம். எவனொருவன் பொறுமையை அநுசரிக்கிறானோ அவன் சந்தேகமின்றிப் பயனடைவான். "ஒறுத்தார்க்கொருநாளை யின்பம், பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்" நம்மிடம் பிறர் கொள்ளுங் கோபத்தை நம் பொறுமையினாலே போக்கல் வேண்டும். நாம் செய்யப்புகும் ஒவ்வொரு கருமத்தையும் பொறுமையுடனேயே செய்தல் வேண்டும். "அகழ்வாரைத் தாங்கு நிலம் போலத்தம்மை, இகழ்வார்ப் பொறுத்தல் தலை" இன்றேல் பல இடையூறுகள் நேரிடும். அதன் பின் நாம் என் இவ்விதம் செய்தோமென எண்ணுவதாற் பிரயோசனமில்லை. ஒவ்வொன்றையும் ஆராய்ந்து நோக்கிப் பொறுமையுடன் செய்தலே நன்மை பயக்கும். பொறுமையை யிழந்தவன் உலகிலுள்ள சகல பாக்கியங்களையு மிழந்தவனுக்குச் சமானமாவான். கோபத்தை யடக்குகிறவர்களிடமே பொறுமை குடி கொள்ளும்.

நாம் ஒரு குற்றம் செய்தபொழுது நம்மேல் ஒருவன் கோபிப்பானாயின், அது நாம் செய்த குற்றத்திற்காகவே கோபிக்கிறான், இனிமேல் நாம் திருந்தி நடத்தல் வேண்டுமெனவும், நாம் ஒருவித குற்றமுஞ் செய்யாத பொழுது ஒருவன் கோபிப்பானாயின், நமக்கென்ன நாம் ஒரு குற்றமுஞ் செய்யவில்லையே யெனவும் எண்ணிப் பேசாதிருத்தல் வேண்டும். அப்படியின்றி நாமும் அவர்களுக்குச் சமானமாகக் கோபங்கொண்டோமானால் சில சமையம் கெடுதிக்குமாளாவோம். இதனையறிந்தே அறிவாளிகள் கோபம் பாபம் சண்டாளம் என அறைந்தனர். ஸ்ரீ மகாபாரதத்தில் தருமர் நாடு நகரமெல்லா மிழந்து வனவாசஞ் செய்தும் தமது பொறுமை யென்னும் பூஷணத்தை எள்ளளவும் கைவிட்டாரிலர். அதனாலன்றோ பின்னரும் நாடு நகரங்களை யடைந்து சுகித்தார்.

ஆதலால் சகோதரிகளே, "கோபமே சத்துரு பொறுமையே பூஷணம்" என்பதை ஒருபோதும் மறத்தலாகாது. பொறுமையே பூஷணமென எண்ணி நடப்போமாகில் முதலில் சிறிது கஷ்டமடைந்த போதும் பின்னால் இன்புறுவோம். நாம், கோபமுள்ளவர்களை எவ்விதம் இகழ்கிறோமோ, அவ்விதமே நம்முடைய கோபத்தையும் முற்றுமிழந்து நடத்தல் வேண்டும்.

அமாவாசையும் பௌர்ணிமையும்.

பூமியில் நாமிருக்கும் இப்பக்கத்திலே சூரியன் பிரகாசித்திருக்கும்போது சந்திரனும் அப்பக்கவாகாசத்தில் பூமிக்கும் சூரியனுக்கு மிடையில் நின்று தன் முழுக் கிரணமும் சூரியகிரணமும் ஒருங்கு சேர்ந்து பூமிக்கு வரும்படியுள்ள காலம் "இந்தவோ டிரவி கூட்ட" மாகிய அமாவாசையாம். அந்நாளஞ் சந்திக்குமிடத்தை அம்மாதத்துக்கு முதலாம் பாகையாக வைத்துக்கொள்ளல்வேண்டும். பின்பு ஒவ்வொருநாளும் சந்திரன் இவ்விரண்டு நாழிகை பிந்திப் பிந்திப் பகலிற் சந்திக்கும். பிந்திய இவ்விரண்டு நாழிகையும் இரவிற் சந்திக்கும். அஃதாவது, தினந்தோறும் இவ்விரண்டு நாழிகைநேரம் அதிகமாக எனவறியத்தக்கது. இப்படி வேறுபட்டுப் போகும் ஆகாய வீதியின் இடமே முதலாம்பாகை இரண்டாம்பாகை மூன்றாம்பாகை நாலாம்பாகை எனப் பகுக்கப்படுவனவாம். அப்படி வேறுபட்டுப் போகும்போது இடவேறுபாட்டாலும் காலவேறுபாட்டாலும் நாமிருக்கும் பாகத்தில் அதன் கிரணசம்பந்தம் அளவாற் குறைந்துபோதல் ஊகிக்கத்தக்கது. பின்பு அம்முதற்பாகமாக எண்ணப்பட்ட பக்கத்துக்கு எதிர்ப்புறத்திற் சந்திரன் 15 நாளில் வந்து சேருகின்றது. அன்று பகலில் நாமிருக்கும் இப்பாகத்துக்குப் பின்புறத்தில் சந்திரன் நிற்கின்றது. பின்பு பூமியினது சுற்றில் நாமிருக்குமிடம் சந்திரன் நிற்கும் பக்கத்துக்கு வரும்போது சந்திர சம்பந்தம் இரவில் உண்டாகின்றது. அப்பொழுது சூரியசம்பந்தமின்றிச் சந்திரசம்பந்தம் மாத்திரம் உண்டாகின்றது. அதனால் சந்திரனுடைய பூரண கிரணமும் பூமிக்குத் தனித்துவரும். அஃதாவது சூரியகிரண சம்பந்தமின்றி வரும். பூமியெனது செல்லுமிடமெல்லாம் நாமிருக்கும் பக்கமென வைத்துக்கொள்ளவேண்டும். இப்படிப் பூமிக்குச் சூரியகிரணமும் சந்திரகிரணமும் ஒருங்கு கூடி ஓளவோடு வரும் நாள் அமாவாசை; சந்திர கிரணம் தனித்து வரும் நாள் பௌர்ணிமை; கூடியும் தனித்தும் அளவின் வேறுபாட்டோடும் காலவேறுபாட்டோடும் வரும் நாள்கள் பிரதமை முதலிய திதிகளென் றின்னணம் அவற்றின் வேறுபாடுகள் காணப்படும்.

அமா—ஸஹ; கூட, வஸ்—நிவாஸே; இருத்தல் எனவே சூரிய சந்திரர்கள் ஒருங்கு வசிக்கின்றார்களெனபதே அமாவாசை என்னும் பதத்தின்பொருளாம். இஃதன்றி அமாவாசைக்கு அநேக நாமங்களிருந்தாலும் "தரிசம்" என்னும் ஒரு நாமமுமுண்டு. "தருஸி"—தெரிதல் எனவே சூரிய சந்திரர்கள் ஒருங்குத் தெரிகின்றார்கள் எனபதே பொருள். சந்திரன் கலைகள் நிரம்பிப் பூரணமாகத்தோன்றுகின்றன என்பதே [பூர்ணி—பூரணம். மா—சந்திரன்] பூர்ணிமா என்பதன்பொருளாம். இச்சொற்கள் [illegible] உள்ளன. திதியென்னும் ஆரிய பதம் தேதி அல்லது திகதியெனத் தமிழில் மருவிவழங்கிவருகின்றது.

நம்மவர்கள் செய்யும் ஒவ்வொரு சுபாசுப கருமங்களிலும் பிரதானமாகக் கவனிக்கப்படுவது திதியேயாகும், திதிகளின் அதிதேவதைகளது சுபாவத்தையனுசரித்தே இன்ன இன்ன திதிகளில் சுபகருமங்கள் செய்யலாம் இன்ன திதிகளில் சுபகருமங்கள் செய்யக்கூடாதென வற்புறுத்துகின்றது. இதுபற்றியன்றோ உருத்திரனை அதிதேவதையாகவுடைய அமாவாசையிலும், ஆதிசேடனை அதிதேவதையாகவுடைய அஷ்டமித்திதியிலும், யமனை அதிதேவதையாகவுடைய நவமித்திதியிலும்பிரதானமாகச் சுபகருமங்கள் விலக்கப்பட்டன. இதனாற்றான் முன்னோர்கள் "அட்டமி நவமி தொட்டது நாசம்" என்று கருமங்களைச் செய்கிலர்.

உருத்திரனை அதிதேவதையாகவுடைய அமாவாசைத்திதியில் பிதிரர்களை உத்தேசித்துச் சிரார்த்தகருமங்களைச் செய்யின் அது அவர்களுக்கு மிகப் பிரீதியாயிருக்கும். அமாவாசையில் [illegible] பெண்கள் விபசாரமுடையராயும் கெட்ட எண்ணம், மாரபாதகம், துராசாரம், கெட்டதொழில், களவு, பொய், இவைமுதலியவற்றையுடையரென்றும், இங்ஙனமே அமாவாசையிற்பிறந்தவரும் திருடராயும், துராசாரமுடையராயும், தீப்புத்திமுதலிய தன்மைகளையுடையராயிருப்பர். இதனாற்றான் "அமாவாசைக்கள்ளன்" என்கின்றார்கள்.

சந்திரன் இருதய காரகனானபடியாலும் அவர் சூரியனுடைய கிரணங்களால் மறைக்கப்பட்டு அமாவாசைநாளில் ஒளியின்றி இருத்தலினாலும் அந்நாளில் பிறக்கும் பிள்ளைகளுக்கு மனம் நல்லநிலைமையில் அமையமாட்டாதென்பதை சூசித்தறிந்துகொள்க. இருதய காரகன் சந்திரன் இருதயஸ்தானமாகிய நாலாமிடத்தில் [illegible] இருந்தால் அவன் வஞ்சகமில்லாத மனதையுடையனாயும் அழுக்காறு, கோபம் இவை முதலியவையின்றி சாத்துவிகமானவனாயும் இருப்பன் என்றறிக.

அமாவாசைத் திதியிலே இருதயஸ்தானமாகிய நாலாமிடத்திலே சனியிருக்கும்படி பிறந்தவன், எப்போதும் கிலேசமுடையவும், பிறருடையவும், செல்வத்தைப்பற்றிப் பொறாமையுடையவர்களாகவும், பிறருக்குத் தீங்கு செய்வதிலும் பிறரை அவமதிப்பதிலும் [illegible]

பொழுதும் மனமுடையவர்களாக இருப்பார்கள். இவர்களது சிநேகிதம் கூடாதெனச் சொல்லப்படுகிறது. சனியுடன் வேறு பாபக்கிரகங்களது பார்வை, சம்பந்தம் இருக்குமேயானால் அவர்களைச் சுருக்குழுப்பாகச் சொல்லக்கூடும். அநுபவத்தில் கண்டுகொள்க.

திதிகளின் அதிதேவதைகளைக் குறித்துச் சில நூல் வித்தியாசமாகச் சொல்லுகின்றது.

இங்ஙனம்,
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்மன்கோவில்,
சுதுமலை.

சுகாதாரம்.

துப்புரவு.

எப்படி நாம் உடம்பின் உட்புறத்தைச் சுத்தமான காற்றினலும், தண்ணீராலும், தூய உணவாலும் சுகாதாரமாய் வைத்திருக்கவேண்டுமோ அதுபோலவே உடம்பின் வெளிப்புறத்தையும், வசிக்கும் இல்லத்தையும், கொல்லையையும், சுகாதாரமாய் வைத்திருத்தல் அத்தியாவசியமாகும். உஷ்ணதேசங்களிலேயுள்ள வாந்திபேதி, கொள்ளைநோய், கொப்புளிப்பான் வைசூரி, வயிற்றுளைவு, காட்டுக்காய்ச்சல் ஆகிய இக்கொடியநோய்கள் பெரும்பாலும் துப்புரவீனத்தினலேயே சனங்களுட் பரவுகின்றன. இந்நோய்களுக்கும் வேறெந்நோய்களுக்கும் மூலகாரணமாகிய கிருமிகளுக்கும் பரவச்செய்யும் ஈக்களும் அழுக்கிலிருந்தே உற்பத்தியாகின்றன. அழுக்கில்லாவிட்டால் இந்நோய்களையும் ஒருவாறு இல்லை எனலாம். ஆகையால் சுகாதார ஜீவியத்திற்குத் துப்புரவு இன்றியமையாதென்பது நன்குவிளங்குகின்றது.

துப்புரவான சனசமுதாயத்தாரைப் பாருங்கள். அவர்களுக்குள் மேலே சொல்லப்பட்ட தொற்றுநோய்கள் மிகக்குறைவு. துப்புரவீனமான கூலிச்சனங்களைப் பாருங்கள். இவர்களுக்குள் வயிற்றுளைவு, வாந்திபேதி, காட்டுக்காய்ச்சல் முதலியன பரந்து, வருஷந்தோறும் இலட்சக்கணக்கான பேர்களைக் கொள்ளையடித்துக்கொண்டு போகின்றன. இவர்களுக்குள் சிறு குழந்தைகளின் மரணம் எவையும் கண் கலக்கப்படவேண்டிய நிலையிலிருக்கின்றன. இதற்குள்ள முக்கியகாரணங்களுள் துப்புரவீனமும் ஒன்றேயாகும்.

நாங்கள் வீட்டுக்குள் இருந்துகொண்டு எங்களைப்போலத் துப்புரவானவர்கள் உலகத்திலேயில்லை என்று புகழ்ந்துகொள்ளுதல் மிகச் சகசம். ஆனால் உண்மையாய் எங்களை நாகரீகம்பெற்ற சாதியார்களோடு ஒத்துப்பார்க்கும்பொழுது இந்துக்களாயிருந்தும் மிகக்கீழ்மையான நிலையில் இருக்கிறோம். இவ்வுண்மையைப் பல நாகரீகமான சாதியாருமுள்ள இம்மலாய் நாட்டிலே பார்த்தால்தான் தெரியும். துப்புரவிலே ஜப்பான் சாதியாரோடொப்பிட நம்மவர்களில் எச்சாதியத்தாராகுதல் முன்வருவார்களா? உலகத்திலே துப்புரவான சாதியாரென்று பேரெடுத்திருப்பது ஜப்பான் சாதியாரே. அவர்களைப்பார்க்கப்பார்க்க எவ்வளவு பிரீதியாயிருக்கிறது. பினங் அல்லது சிங்கப்பூரிலே ஜப்பானிய பெண்பாலாரின் கூட்டத்தைப் பார்க்கும்பொழுது அது அன்னப் பக்ஷிகளின் கூட்டத்தை நினைவுறுத்துகின்றது. இவர்களோடு அல்லது சீனப்பெண்களோடு எங்கள் கூலிப்பெண்களை அல்லது உச்சிநின்று உள்ளங்கால்வரைக்கும் ஆபரணமணிந்த வகுப்பினரை ஒத்துப் பார்க்கும்பொழுது எவ்வளவு ஆத்திரமாயும் வெட்கமாயுமிருக்கிறது. உதாரணமாய்ப் பாருங்கள் இக்கூலிப்பெண்களின் தலைமயிர், பேன் உள்ளதாய், எண்ணெய் இல்லாது காவோலையாய்ப் பறக்கும்; அல்லது எண்ணெயில் மிதக்கும், [illegible] சீப்புப்படாதது, அருவருக்கத்தக்கவிதமாய் முடியப்பட்டதாய், முடியப்படாததுமாயிருக்கும். தலைமயிரோடு, துப்புரவானதும், பக்குவமாய் எண்ணெய் இடப்பட்டதும், கருமையானதும், எந்நேரமும் சீப்பினால் அழுத்தப்பெற்றதும், நறுமணமானதும், எழுத்திலமையாத சித்திரத்திலே அமையக்கூடியமாதிரியாய் முடியப்பட்டதுமான ஜப்பானியப்பெண்களின் தலைமயிரை ஒத்துப்பார்க்கும்பொழுது ஆர்தான் எங்களை அழுக்கான சாதியாரென்று சொல்லார்கள். கூலிச்சனங்கள் வேறு நாங்கள் வேறல்ல, எம்பெண்களை எடுத்துப்பேசினேனென்றும், பெண்களிலிருந்துதான் புருஷர்களினதும் பிள்ளைகளினதும் துப்புரவும் பிறவும் அறியலாம்.

கடவுள் சிறப்பானவர், துப்புரவானவர். ஆகையால் நாங்களும் அப்படியல்லவா இருக்கவேண்டும்! வறுமையாயிருந்தாலும் வறுமையிற் செம்மையாயிருக்கவேண்டும். "கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்பதல்லவா எங்கள் பெரியோர் மந்திரம்.

[illegible], பேனுமுள்ளவர்கள் மண்ணெண்ணெயைக் கொஞ்சம் செறிக்கப்பூசி அரைமணித்தியாலத்தின் பின் சவர்க்காரத்தாலும் சுடுதண்ணீராலும் நல்லாய்க்கழுவுதல் வேண்டும். பின ஒவ்வொருநாளும் சீராய்த் தலைமயிரைச் சீவிவருதல் வேண்டும். சீப்புவாங்கக் காசில்லாதவர்கள் ஒருநேரச் சாப்பாட்டைச் சாப்பிடாதுவிட்டு அச்சாப்பாட்டுப்பணத்தைக் கொடுத்து ஒரு சீப்பைவாங்கி உபயோகித்தல் மிக மேன்மையான செய்கையாகும். எண்ணெயிடும்பொழுது உள்ளங்கையில் ஒரு சதத்தளவு விட்டு உச்சியில் தேய்த்தால் போதுமானதும், துப்புரவானதுமாகும். அப்படியில்லாது செறிக்கப்பூசித் தலையையும், படுக்கும் பாய்தலையணைகளையும் பிள்ளைகள் தங்களுடைகளையும், புத்தகங்களையும், உடம்பையும் அழுக்குப்பண்ணும்படி செய்தல் அழுக்கான செய்கையாகும். தாய்மார் பிள்ளைகள் நல்லாய் வளரவேண்டுமென்று அதிகமாய் எண்ணெயை யிடுவது மிகச் சகசம். எண்ணெயை, அப்பியங்கஸ்நானமல்லாத மற்றைய காலங்களில் அதிகமாயிடுதலினால் பிள்ளைகளின் வளர்ச்சி தங்கியிருக்கிறதென்பது பெரும் அறியாமையாகும். சீனக் குழந்தைகள், மலாயருடைய குழந்தைகள் எண்ணெயைக் கனவிலும் கண்டிரார். அப்படியிருக்கவும் பிள்ளைகள் எவ்வளவு தளதளப்பாயும், முகத்திலே குழந்தைப்பிரகாசம் ஒலிக்கிறவர்களாயும் இருக்கின்றார்கள். இக்குழந்தைகளைக் கண்டால் தருணம் வாய்க்கும் வேளைகளில் கொஞ்சாமல், அல்லது கொத்தையில் கையாலே கிண்டாமல் போக எவர்க்கும் மனம்வராது. அவர்கள் எங்கள் பிள்ளைகளைப்போல வரண்ட பிள்ளைகளல்ல.

தலைமயிர் இவ்வளவு அழுக்காயிருந்தால் சருமம் எவ்வளவு அழுக்காயிருக்குமென்பதைச் சொல்லவும் வேண்டுமா? அழுக்கு சருமத்தை மூடியிருப்பதினால் சருமத்திலேயுள்ள சிறுத்துவாரங்கள் அடைபட்டுப் போகின்றன. சிறுத்துவாரங்கள் அடைபட்டுப்போனால் உடம்பிலேயுள்ள அழுக்குகள் வெயர்வையாய்த் துவார மூலமாய் வெளிச்செல்லமுடியாது தடைபட்டுப்போகின்றன. சருமமும் போதிய வெளிச்சத்தையும், பரமாணுவையும் பருகவும் முடியாது. அழுக்கிலிருந்தெழும் துர்க்கந்தமும் சுகாதார ஈனமாயிருக்கின்றது. ஆகையால் குளிப்பு முழுக்கு மனிதனின் சுகாதார ஜீவியத்திற்கு இன்றியமையாதன. விடிய ஐந்துமணிக்குமுன் நித்திரை விட்டெழுந்து, தந்தசுத்திசெய்து குளித்தலே எங்கள் ஆசாரமுமாகும். குளிக்கும் பொழுது அழுக்கைநீக்குவதற்காய் ஒரு முரடான துணியால் உடம்பைத் தேய்த்துக் கழுவுவதே சவர்க்காரம் பூசுவதிலும் பார்க்க நலமான செய்கையாகும். குளிர்ந்த தண்ணீரிலே குளிப்பதுதான் உடம்பிற்கு உறுதியையும், பலத்தையும் கொடுக்கக்கூடியதாகும். சிறு குழந்தைகளையும், நோயாளிகளையும் சுடுதண்ணீரிலே குளிப்பாட்டல்வேண்டுமென்பது எல்லாருக்கும் நன்குதெரிந்த விஷயமாகும்.

அப்பியங்கஸ்நானம் சாஸ்திரசம்பந்தமானதும், சூடான தேசத்திலேயிருக்குமெங்களுக்குச் சக்தியைக் கூட்டக்கூடியதுமாகும். இஸ்நானம் எண்ணெயைத் தேய்க்கும் விதத்திலேயே அதிகம் தங்கியிருக்கிறது. எண்ணெயைத் தானே தனக்கு இடுவதினால் உடம்பிலேவெயர்வையுண்டாகின்றது. வெயர்வையுண்டானால் எண்ணெயைச் சருமத்திற்குள் செலுத்தமுடியாது. காலையிலே தான் சருமத்திலே வெயர்வை இராது. இந்தநேரமே முழுக்குக்குகந்த நேரமாகும். (வரும்)

S. M.
பகான்.

தாழ்மை.

சகல கேடுகளுக்கும் மூலமும் ஆதாரமுமாகிய ஆங்காரத்துக்கு மருந்தேயானது தாழ்மையாகும். அழிவுக்கு முன்னான அகந்தையாலும், விழுகைக்கு முன்னான மேட்டிமையாலுமே பூர்வம் பேரோங்கியிருந்த அசீரியப் பபிலோனிய ரோமகிரேக்க இராச்சியங்கள் உருக்குலைந்தழிந்தன. ஆங்காரிகளிடம் மற்றத் துர்க்குணங்களும் மலிந்திருக்குமென்று நிச்சயிக்கலாம். அவையே அவர்களைக் கெடுக்கும். தாழ்மையுள்ளோர் மற்றெல்லாப் புண்ணியங்களையும் அநுசரிக்க வல்லோராயிருப்பர். அதின்றேல் ஒரு நன்மையுஞ் செய்யக்கூடாது. சாந்த குணமுள்ளோரிடம் தாழ்மையாகிய சற்குணம் நிலைத்து நிற்கும். இத்தாழ்மையாலேயே மேன்மையடையக் கூடுமல்லாது ஆங்காரங்கொண்டு தன்னை வியந்து புகழ்வதால் அதை அடையக் கூடுமென்றெண்ணல் [illegible] கண்ணீர் சொரிந்து வளர்ப்பதுபோன்ற மூடத்தனமேயாகும். கல்வி அழகு வீரம் செல்வம் முதலியவை காரணமாய் அநேகர் பெருமை கொண்டிறுமாந்திருக்கின்றனர். இல்லார் தம் முன் குறையிரக்க நிற்கேமாற் [illegible] தலைவணங்கித் [illegible] கல்வியுடைமை பொருளுடைமை [illegible] செல்வமெனப்படா. [illegible] கல்வி கரையில கற்பவர் நாள்சில [illegible] பல கற்றேரும் யாமென்று தருக்குறுதல்.

அழகுமதித்தோரும் கரும்பும் பூக்கள் போல அழகற்றிருக்கும் [illegible] உணர்ந்தோர் அநேகருள்ளார். நல்லொழுக்கமும் தாழ்மை முதலியனவே எல்லாருக்கும் பொதுவான மேலான அழகாகும். இதன்றி ஒவ்வொருத்தனுக்கும் குறிய விசேஷ அழகு குணங்களுமுள. அவற்றுட் பிரதானமானவை "அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" "செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்" "மன்னர்க்கழகு விருந்தொடுண்டல்", "பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல்," "குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்" எனவும் பிறவுமாம். இப்படியான இலக்கணங்களையே அழகெனப் பெரியோர் கொள்வாரன்றி அழிந் தாழியுஞ் சரீர அவயவங்களின் வீணழகை ஒரு பொருட்டாய் மதியார். முகத்தையல்ல அகத்தைப் பார்க்கவேண்டும். பணமிருந்தும் குணமில்லார் பயன்படார். எட்டியானது அழகுற்றிருந்தும் அதனைக்கிட்டுவாரிலர். பலாப்பழமானது புறத்தே முள்ளுள்ளதேனும் உள்ளே மதுரமான சுளைகளை உடையதாயிருக்கும். காக்கையையும் குயிலையுஞ் சத்தத்தால் மட்டுமறியக் கூடும். மனிதரையும் வெளிவேஷத்தாலும், விபரீதமான பேச்சுக்களாலுமல்ல கிரியைகளாலேயே மதிக்கவேண்டும். நீருண்ணக் குளக்கரைக்குச் சென்ற மானொன்று தனது நிழலை நீருட் கண்டு உவகை கொண்டு ஒவ்வொருறுப்பாய் ஆராயத் தொடங்கிற்று. முதலிற் கப்புங்கவருமாய் வளர்ந்த தனது அழகிய கொம்புகளைக் கண்டு பேரானந்தமுற்றது. பின் கால்களின் மென்மையையும் அழகின்மையையும் கண்டு துக்கித்தது. உடனே வேட்டை நாயொன்று பின் தொடர, மான் வாயுவேகமாய் ஓடத்தலைப்பட்டது. செடிகட்கிடையில் அழகிய கொம்புகள் மாட்டிக்கொண்டன. அப்போதுதான் மானுக்கு உண்மை தெரிந்தது. அழகிய கொம்புகளின்றேல் அழகில்லாதவென்றிகழ்ந்த கால்களால் ஓடி ஒளித்திருக்கலாமே என்று பச்சாத்தாபப்பட்டது.

மயிலைச் சிறகும், குயிலை நாதமும் அலங்கரியாநிற்கும். மனிதரை ஒழுக்கமென்று உயர்ந்தோராலுரைக்கப்பட்ட அடக்க ஒடுக்க முதலான சற்குணங்களலங்கரிக்கும். "நூன்முறை தெரிந்தோர் சீலத்தொழுகுவர்" [illegible] ஓதலீதலாதிப் பல குணங்களும் அவற்றுக்கெல்லாம் மூலாதாரமாகிய தாழ்மையும் இல்லையாரும் ஒழுக்க முயர்குலத்தினன்றெனிற் தாழ்மை அதனிலும் பன்மடங்கு உத்தமமெனலாம். தாழ்மை உள்ளவர்கள் வரவறிந்து மட்டாய்ச் செலவுசெய்து முட்டின்றி வாழ்வர். அலங்கார வஸ்திராபரணங்கள் பூண ஆங்காரம் பிறக்கும் சரீர பலனைக்குறித்து வீம்பு பாராட்டலுந் தகாதன்று. காற்றுக்கும் வெள்ளத்துக்கும் வணங்கிய நாணற் செடிகள் சேதமுறுவதில்லை. தேக்கு முதலிய பலத்த மரங்கள் வேரோடு பாறி விழுகின்றன. ஆங்காரிகளின் தாழ்வும் பொறையாளரின் வாழ்வும் இத்தகைத்தே. குறைகுடமன்றி நிறைகுடந் தளம்பாது. வெண்கலத்தன்றிப் பொன் கலத்[illegible], கல்வி, செல்வம், அழகு முதலியன குறைவானவர்கள் அவற்றை மறைக்கும்படி தம்மைப் புகழ்வதும் அலங்கரிப்பதும் இயல்பு. பெரியோரால் கூறப்பட்ட பெருமைபெறற்குரிய வழி பிறர் [illegible] ஆற்றி சிறுமை புறங்காத்து யார் யார்க்கும் நன்மை செயலேயாம். இச்சற்கிருத்தியங்களெல்லாம் தாழ்மை யென்னும் ஆழமான ஊற்றினின்று சுரப்பன வெனில் அதன் பெருமைக்கிணை யேது முண்டோ? இதை ஒழித்துப் பிறவழியாலுயர்ச்சி யுறலாமெனக் காத்திருத்தல் இலவு காத்திருந்தேமாந்த கிளியின் செயலோடொத்த மூடத்தனமான மனோராச்சியமேயாகும். குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோரும் நடைமெலிந்து வருந்துவர். ஆதலாற் செருக்குறத் தகுதியுடைத்தன்று. அறத்திடு பிச்சை கூவிரப்போர் அற்றைப் பகலே அரசாளினுமாளுவர்.

ஆதலாற் செல்வக்குறைவைவிட்டு ஒருவரை இகழ்வதும் நன்றன்று. தாழ்மையற்றோரின் செல்வத்தை விட தாழ்மையுள்ளோரின் வறுமை நன்று. "அடக்கம் அமரருள்ளுய்க்கும் அடங்காமை ஆரிருளுய்த்துவிடும்" "அடக்கமுடையாரறிவிலரென்றெண்ணிக் கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில் ஓடுமீனோட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு." நுணலுந் தன்வாயாற் கெடுவதுபோல் ஆங்காரிகள் தம்மாலேயே கேடடைகிறார்கள். "மிகுதியால் மிக்கவை செய்தாரைத் தாந்தம் தகுதியால் வென்றுவிடல்" இத்தகுதி எதுவென்றாராயவோமேல் சகலர்க்கும் பயன் தருவதாகிய தாழ்மை பொறுமை அடக்க ஒடுக்கம் முதலான சற்குணங்களேயாகும். ஆங்காரங்கொண்டு வாழ்ந்தாருமில்லை தாழ்மையுற்றுக் கெட்டாருமில்லை. மதுபானங்களை உட்கொள்ளுங்கால், முதலில் ஓர் வகைக்கிளர்ச்சி உண்டாவதுபோற் தோன்றச்செய்து பின் உள்ள நலங்களையுங் கெடுத்துவிடும். ஆங்காரமும் அத்தகைத்தே. தாழ்மையுள்ளோர் பழங்களையுடைய மரக்கிளைகள்போல எப்பொழுதும் எவ்விடத்தும் யார்மாட்டுந் தலைவணங்கி நிற்பர். [illegible] பழமற்ற மரம்போல் [illegible] நிமிர்ந்திருப்பர். நாம் ஆங்காரத்துக்குரியவிதமாய் நடந்தும் மெய்பாராட்டியும் மற்றவரைப் புறக்கணித்தும் இகழ்ந்தும் வருவோமேல் சமையம் பிறர் அவமதித்துப் பொறாமைகொண்டு வஞ்சனை விரோதம் முதலான அநேகங்களைச் செய்யத் துணிவர். சிறுவரை எவரும் நேசிப்பர். ஏனைனிற் கபடற்ற தாழ்மைக் குணமவர்களிற் காணப்படுகின்றது. அச்சற்குணம் [illegible] அவரை யாவரும் உபசரித்தாதரிப்பர். இதுபற்றியே பெரியோர் "கீழோராயினுந் தாழ உரை"யென்றனர். "கெட்டிருப்புப் பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" தாழ்மையினுற் காரிய சித்தி உண்டாவது போல, ஆங்காரத்தாலாகாது. இலங்கையில் வறுமையும் தீமையும் வளர்ந்து சனங்கள் வருஷந்தோறும் வருந்துவதன் காரணம் பெற்றோர் தம் பிள்ளைகளை ஆங்காரத்திற் பயிற்றுவதேயாகும். தற்காலத்தில் இலங்கை வாசிகள் தம் பிள்ளைகளை மூடத்தனமாய் நேசிக்கிறார்கள். இவர்கள் பிள்ளைகளைத் திருத்துவதற்காய்த் தண்டிக்கும் ஆசிரியர்களோடு தாமுஞ்சண்டைக்கெழப் பின்னிடார்கள். சிலபெற்றோர் கல்விகற்பியாதிருப்பினுங் காரியமில்லை பிள்ளைகளைத் தண்டியாதிருந்தாலே போதுமென்று எண்ணியிருக்கிறார்கள். மருந்து கசக்குமென்று நோயுற்றபோது பிள்ளைகளுக்கு அதைக்கொடாமல் சும்மாபார்த்திருப்பரோ. தற்காலத்திற் பிள்ளைகளுக்குப் பெற்றோர் காண்பிக்கும் தகுதியற்ற நேசமானது அவர்களைப் பெலவீனராகவும் ஆங்காரிகளாகவும், துஷ்டராகவும் மாற்றுகின்றது. வேலை செய்வது அகௌரவமென்ற வீண் எண்ணத்தைப் பெற்றோர் உணரச்செய்கிறார்கள். கல்வி கற்பது கடினமான வேலைகளின்று நீங்கிச் சோம்பேறித்தனமாய்ச் சீவிப்பதற்காகவே என்ற ஓர் எண்ணம் எம்மவரிற் பரவியிருக்கின்றது. விசேஷமாய் இங்கிலீஸ் கல்விமுற்றும் இந்நோக்கத்திற்கே இலக்காயிருப்பதைக் காணலாம். உத்தியோகங்கள் கிடைக்காதபோது பெற்றோரின் முயற்சியையேனும் மற்றுமுள்ள கைத்தொழில் கமத்தொழில்களையேனும் செய்து சீவியத்தை நடத்தக்காண்கின்றிலம் இவ்விபரீதங்கள் யாவும் நவீன நாகரீகத்தின் பலனேயாம்.

கடித.

அடைவுநகைவிற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு மா. கு. தெண்டாயுதபாணியிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில்விற்கப் படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆ ஆகஸ்ட்மீ

நம்	திக.	ரு	பெயர் ஊர் நகைகளின் விபரம்
32	2	25	சி. [illegible]வல்லிப்பிள்ளை மண்டதீவு சறட்டட்டியல் 1
71	3	12	ய. சவரியல் காவாத்துறை கல்லட்டியல் 1
95	4	7	ம. சின்னத்தம்பி ஒட்டுமடம் குப்பிக்கடுக்கன் 2
97	4	12	T. D. A. றகீம் பொலிஸ்லேன் சிறுகாப்பு 2
137	5	6	மீ. சச்சுமுகம்மது சோனகதெரு வெள்ளித் தண்டை 2
158	6	15	த. அப்புத்துரை சிவன்கோவிலடி வெள்ளிப்பாதசரம் 2
166	6	10	வ. சந்தியாப்பிள்ளை மண்டைதீவு குவளைக்கடுக்கன் 2 வாளி 2
203	7	15	U M மாட்டின் நாவாலி கல்மோதிரம் 1
227	9	15	மு. செயதுமுகம்மது சோனகதெரு குவளைக்கடுக்கன் 2 வாளி 2
257	10	25	செ. வயிரமுத்து புங்குடுதீவு சறட்டட்டியல் 1
262	10	25	மு. செயகுமுகம்மது சோனகதெரு குவளை 2, குப்பி 2 கல்தோடு 2
277	10	50	மு. சின்னக்குட்டி கரையூர் பட்டணக்காப்பு 2
291	11	6	பா. சின்னவி காவாத்துறை குப்பிக்கடுக்கன் 2
332	12	13	மு. முகம்மதுமீராசாய்பு சோனகதெரு வெள்ளிக்கடையம் 2
365	14	10	சி. கணபதி [illegible] கல்தோடு 2
454	18	18	அ. செயினுமுகம்மது சோனகதெரு மணிக்கோவை 1
461	19	12	செ. சரவணமுத்து வெள்ளி உறுப்படி 20 மோதிரம் 1
471	19	12	கா. [illegible] செட்டித்தெரு மோதிரம் 1
491	20	6	மெ. வரிசைமுகம்மது சோனகதெரு பணிக்கோவை 1
526	22	7	க. [illegible] சோனகதெரு வெள்ளி தண்டை 2
537	23	10	ம. அப்புக்குட்டி [illegible] 1
558	23	15	இ. [illegible] மோதிரம் 1
588	25	9	வே. செல்லம் [illegible] 1
604	25	10	கா. மருதப்பு [illegible] கூடு 1
644	26	7-50	கா. [illegible] 1
671	28	11	க. [illegible] 2
711	30	10	ம. செல்லையா [illegible] 1

விற்பனவு:—[illegible] 1925 (12-9-25) சனிக்கிழமை [illegible] 10 [illegible] பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

(Mis. 709.)

S. Aivampillai,
Udaiyar,
Van-West.

சில யோசித்தற்பொருட்டு அழைக்கப்பட்டபோது தரித்துச்சென்ற உடை சாமானியமான கதருடையாகும். மகாத்மா கதருடையோடு சென்றனரென்பதை விட்டுப் பிரதிகாவலர் அவரை எவ்வாற்றானும் அலட்சியஞ்செய்தாரா? அவர் மகாத்மாவைப் பெரிதும் உபசரித்து நாள் முழுவதும் அந்தரங்கமான ஒரு இடத்தில் அழைத்துக்கொண்டுபோய் அளவளாவிப் பேசினாராமே. உடையைத் தரிப்பவரினால் உடைக்கு மரியாதையன்றி, உடையாலே தரிப்பவருக்கு எவ்வகையான மரியாதையுமில்லை. அல்லாமலும் உடை அவரவர் தத்தம தேசசுவாத்தியத்திற்கும் வசதிக்கும் ஏற்கக் கைக்கொண்டு வருவதன்றி அவருக்கும் இவருக்குமாக அணிந்துகொள்வதொன்றன்று".

* * *

"மேலும், கரும்பு கட்டோடு இருந்தால் எறும்புதானே வரும் என்றபடி நாங்கள் எங்கள் சமயத்திற்குரிய அநுஷ்டானங்களோடும் சாதிக்குரிய ஆசாரங்களோடுமிருந்தால் எல்லாரும் எங்களை மரியாதைசெய்வார்கள். இவைகளை விடுத்து 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன், பொல்லாச்சிறகை விரித்தாடினாற்போல்' நாம் நமக்கென ஒரு நியதியின்றி மற்றவர்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடக்கத் தலைப்பட்டால் நம்மை எவரும் மதியாது அலட்சியஞ் செய்வர். நாமும் அன்ன நடைநடக்கப்போய்த் தன்னடையுங் கெட்ட காக்கைபோல் இடர்ப்படவேண்டிவரும். அதுவுமன்றி இந்த இலங்கையிலேயுள்ள தமிழரும் சிங்களவரும்தான் இப்படிச் சாதிக்கட்டுப்பாடு சமயக் கட்டுப்பாடுகளின்றி நியதியற்றுக் கண்டபாவனையிற் கொண்டை முடிக்கின்றார்கள். வேறு எந்தச் சாதியார் எந்தச்சமயத்தார் இப்படிச்செய்கின்றார்கள்? அரசாங்க உத்தியோகத்தருக்கு உடையைப்பற்றிக் கட்டுப்பாடொன்று இருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். உபாத்தியாயர்கள் நியாயவாதிகள் சட்டநிரூபணசபை அங்கத்தவர்கள் பட்டினபரிபாலனசபை அங்கத்தவர்கள் இவர்களுக்கெல்லாம் யார் கட்டுப்பாடு விதித்தார். இவர்கள் ஏன் சுதேச உடை தரிக்கவொண்ணாது? மனமுண்டானால் இடமுண்டு. குதிரைக்கு லாடன் கட்டும் பறங்கியும் சட்டை சப்பாத்து தொப்பி தானே போட்டிருக்கின்றான்; அதனாலே அவனுக்குமரியாதை நடக்கிறதா" என்று முருகேசு பெருஞ் சொற்பொழிவு செய்யத் தொடங்கவே சரவணமுத்து "அண்ணை போதும் நிறுத்துங்கள், நீங்கள் சொல்வது முழுவதும் சரி" என்று சொல்லி விடைபெற்றுச் சென்றார்.

இலங்கைப் பரிபாலனச் செலவுத் திட்டம்.

[கௌரவ ஸ்ரீ. சு. இராசரத்தினமவர்கள் பரிபாலனச் செலவுத்திட்ட விஷயமாக நடந்த விவாதத்திற் கூறியவை]

(முற்றொடர்).

அரசினரின் மதுபரிபாலன முறை.

இன்னுமொரு விஷயமாகயான இங்கே சில பேச விரும்புகிறேன். மதுக்கடைகளை நீக்கும் விஷயமாகவும் மதுபரிபாலன முறையைப்பற்றியுமே நான் இப்பொழுது சில சொல்லப்போகிறேன். 1921-ம் ஆண்டு கௌரவ ஸ்ரீ துரைசுவாமியவர்கள் வடமாகாணம் முழுவதற்கும் பிரதிநிதியாக இருந்தபோது சட்டநிரூபண சபையிலே மதுபரிபாலன விஷயமாக மேலே சொல்லப்படும் தீர்மானத்தை எடுத்தாண்டு சபையாரின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொண்டனர். தீர்மானம் வருமாறு:—

"மதுபானங்களையும் மயக்கந்தரும் அபின் கஞ்சா முதலிய சரக்குகளையும் மருந்தாக உபயோகிக்கவேண்டி வந்தாலன்றி வேறு எவ்வாற்றானும் சாட்டிப் பாவிக்கவொண்ணாதென்ற அபிப்பிராயஞ் சனங்களுக்கு இருத்தலினால் இந்த மதுபானத்தையும் மற்றும் வெறிப்பதார்த்தங்களையும் அறவே நீக்கவேண்டியதற்கான முயற்சிகளை மதுபரிபாலனப் பகுதியார் செய்தல்வேண்டுமென அரசினர் கட்டளையிடுதல்வேண்டுமென்பதே."

அக்காலத்திலே தேசாதிபதியாயிருந்த சேர் உவில்லியம் மனிங் துரையவர்களும் இந்த தீர்மானத்தை உவந்தேற்று இதற்கு ஆதாரமான சில குறிப்புரைகளைச் சொல்லியிருக்கின்றார். ஆனால் இப்பொழுது அரசினர் இந்தத்தீர்மானத்திற்குமாறாக முயற்சிசெய்கின்றனர்போற் காணப்படுகின்றது. இந்த தீர்மானத்தை மதுபரிபாலனப் பகுதியார் அங்கீகரித்து இதன்படி நடக்கின்றார்களா என்பதுதான் எனது ஆட்சேபம். கள்ளுச்சேர்க்காவிட்டால் 20000 மரமேறிகள் பிழைப்பின்றிச் சங்கடப்படுவார்களென இப்பொழுது பிரதிதேசாதிபதி தெரிவித்திருக்கின்றார். இந்த மரமேறிகள் 20000 பேருக்காக ஊரவர்களாயுள்ள 1000000 பேருங் கெட்டுப்போவதா? பிருத்தானிய சக்கிராதிபத்தியத்தின் வரலாறு முழுவதையும் நன்குணர்ந்துள்ளவரென நாம் நினைத்திருக்கும் பிரதிதேசாதிபதியின் வாக்கிலிருந்து இவ்வாறானவிஷயம் வெளிவந்துள்ளமைக்குக் காரணம்யாதென உண்மையாகவெனக்கு விளங்கவில்லை. பிருத்தானியர், முன்பு அடிமைகளாயிருந்தவர்களை விடுதலை செய்துள்ளார்களல்லவா? கடற் கொள்ளைக்காரரை இல்லாது செய்துள்ளார்களல்லவா? அக்காலத்தில் அடிமைத் தொழிலையும், கடற் கொள்ளைக்காரரையும் ஒழித்துவிட்டமையினால் அவர்கள் தொழிலின்றி யிருப்பார்களேயென்ற ஆட்சேபம் பிறந்திருக்கவில்லையே. இப்பொழுதுதான் இந்த வேலையில் [illegible] வரவேண்டுமோ? யாழ்ப்பாணத்தவர் மதுபானத்தை அறவே ஒழித்துவிடவேண்டுமென நிச்சயித்துக்கொண்டனர். அமெரிக்காவிற் செய்தவாறு இங்கும் மதுபானத்தை அறவே அகற்றிவிடுதல் ஆகுமென்பது யாழ்ப்பாணத்தவர் கொள்கை. 1917 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 25 சாராயத் தவறணைகள் இருந்தன இப்பொழுது 6 தவறணைகள் மாத்திரம் இருக்கின்றன. 1917 ம் ஆண்டில் 112 கள்ளுக்கடைகள் இருந்தன இப்பொழுது 20 கள்ளுக் கடைகள்தான் இருக்கின்றன. அந்நியநாட்டுக் குடிவகைக் கடைகளும் யாழ்ப்பாணத்திலிருந்தவைகள் சனசம்மதம்பெற்று அகற்றப்பட்டன. ஈற்றிலே பருத்தித்துறையிலுள்ள அந்நிய குடிவகைக்கடையை அரசினராகவே ஒழித்துவிடும்படி கட்டளைசெய்துள்ளனர்.

இப்பொழுது அங்கே இந்தக் கள் சாராயத் தவறணைகளும் ஒரு அந்நிய நாட்டுக் குடிவகைக் கடையும் அந்நிய நாட்டுக் குடிவகை விற்க உத்தரவுபெற்ற ஒரு விடுதியும் சில வாடிவீடுகளுமே இருக்கின்றன. நாம் அரசினருக்கு மனுப்பண்ணியமையினால் அவற்றுள் சிலவற்றை நீக்குவதாக அரசினர் வாக்குப்பண்ணியிருக்கின்றனர். சனசம்மதம் பெற்றுத் தவறணைகளை நீக்கமுயன்றபோது நூற்றுக்கு ஐம்பத்தைந்து விகிதமானோருடைய சம்மதம் மாத்திரம் கிடைத்தமையினால் ஒரு கள்ளுத் தவறணையையும், நூற்றுக்கு 57 6 விகிதமானோருடைய சம்மதம் பெற்றமையினால் இரண்டு கள்ளுத் தவறணைகளையும் இரண்டு சாராயத் தவறணைகளையும் ஒரு அந்நிய நாட்டுக் குடிவகைக் கடையையும் அந்நிய நாட்டுக் குடிவகை விற்க விற்க உத்தரவு பெற்ற ஒரு விடுதியையும் நீக்குவதில் இம்முறை தவறிவிட்டோம். யாழ்ப்பாணம் இந்த மதுவிலக்கு விஷயமாக அதிக சிரமப்பட்டு உழைத்தும் ஈற்றில் ஏமாற்றமடைந்தது. ஏனென்றால் அளவுபடுத்திக் கூறமுடியாத அந்நிய நாட்டுக் குடிவகை யாழ்ப்பாணத்துள் வருதலினாலேயாம்.

பதினெட்டடி நீளமுள்ள சுறாமீன்.

சென்ற செவ்வாய்க்கிழமை காலை கழுத்துறைக் கடற்கரையிலே பதினெட்டடி நீளமுள்ள ஒரு சுறாமீன் வலைஞராற் பிடித்துக் கொண்டுவரப்பட்டு நூற்றைம்பது ரூபாவாக விற்கப்பட்டது. அதன் வயிற்றினுள் இரண்டடி நீளமுள்ள பதினெட்டு மீன்கள் இருந்தன.

துருக்கியில் ஐரோப்பிய உடை.

துருக்கியிலே குடியரசுக்குட்பட்ட இடங்களில் குருமார்மாத்திரம் தலைப்பாகையணிதல்கூடுமென்றும், அவர்களும் அரசாங்கவேலைத் தலங்களுள் அதை அணிதல் கூடாதென்றும், ஏனைய உத்தியோகத்தரெல்லாரும் ஐரோப்பிய உடையணிதல் வேண்டுமென்றும் அங்குக்கூடிய "சம்மிஷனர்" சபை நவீன பிரமாணங்களை விதித்திருக்கிறது.

விந்தனை வேடர் மீது வியாச்சியம்.

விந்தனையிலுள்ள இரு வேடுவர் நெற்செய்கையின்பொருட்டு முடிக்குரிய நிலத்திலுள்ள பற்றைகளை வெட்டி மரங்களைத் தறித்தார்களென்ன வதுளைப் பொலிஸ் கோட்டிலே அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிபதி அவர்களைக் குற்றவாளியாகக் கண்டு இருவருக்கும் தனித்தனி பத்து ரூபா அபராதம் அல்லது இரண்டு வாரச் சிறை விதித்தனர். அவர்கள் அபராதம் இறுக்கும் ஆற்றலில்லாது சிறைக்குச் சென்றார்கள்.

இரட்டைப்படுகொலைவழக்கு

கோப்பாய் ஸ்ரீ சேனாதிராசா என்பவரின் கொலையிற் சம்பந்தப்பட்டார்களெனப் பத்துப்பேர் சென்ற சனிக்கிழமை பருத்தித்துறைப் பொலிஸ்கோட்டிலே குற்றஞ்சாட்டப்பட்டார்கள். அவர்களுள் ஒருவரை ஒழிந்த ஏனைய எல்லோரும் நல்லூரிலுள்ளவர்கள். ஒருவர் கன்னியங்காட்டுவிதானையாயிருக்கு மிருவத்தனபிள்ளையென்பவர். இவ்வழக்கிலே இதுவரையிற் சம்பந்தப்பட்ட சாட்சிக்காரர் நாற்பதுபேர்.

நூறாம் வருட ஜெநநதினக் கொண்டாட்டம்.

சென்ற வெள்ளிக்கிழமை இரவு தாதாபாய் நௌரோஜியவர்களின் நூறாம்வருட ஜெநநதினக் கொண்டாட்டம் நடைபெற்றது. நௌரோஜியின் தேசபக்தியைப் பற்றியும் அதுகாரணமாக அவர் செய்துள்ள அரிய செயல்களைப்பற்றியும் உபந்நியாசங்கள் நிகழ்ந்தன.

தண்ணீர்க்கஷ்டம்.

மழையின்மையால் மாத்தளையிலே தண்ணீர்க்கஷ்டம் வரவர அதிகப்படுகின்றது. அங்குள்ள பட்டினபரிபாலனசங்கம் தண்ணீரை உபயோகிக்கும் விஷயத்தில் அதிக கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. புகைவண்டித் தண்ணீர்த்தொட்டிக்குத்தானும் போதிய தண்ணீரில்லையென்று சொல்லப்படுகிறது.

பின்னரும் ஜப்பானில்நேர்ந்த பெருவிபத்து.

சென்ற செவ்வாய்க்கிழமை ஜப்பானிலே கோறியாவின் தென்பாகமும் கூச்ஷூவின் வடபாகமும் உக்கிரமான புயலினால் படுசேதமுற்றன. மீன்பிடி வள்ளங்களும் பாரமேற்றிய தோணிகளும் ஆழிவாய்ப்பட்டன அநேகர்மாண்டனரென்றுசொல்லப்படுகிறது. இருபுகைரதத் தொடர்கள் நொருங்கின. வுஸ்ஜான் என்னுமிடத்துக்குச் சமீபமாயுள்ள இருநூற்றைம்பது வீடுகள் உக்கிரமான திரையினால் அதிகசேதப்பட்டன. அவற்றுள் நாற்பது வீடுகள் அள்ளுண்டு கடலுக்குட் போயின.

புகைரத ஸ்தானத் தலைவரைக் கிராமவாசிகள் சருவிய வழக்கு.

சில வாரங்களுக்கு முன் கண்டியில் நிகழ்ந்த பெரஹெறாக் கொண்டாட்டத்துக்குச் செல்லும் பொருட்டுக் கிராமவாசிகள் பலர் உக்குவலைப் புகைரத ஸ்தானத்திற் பிரயாணச் சீட்டுப் பெற்று நின்றபோது அங்குத் தங்காது செல்லும் வண்டி (எக்ஸ்பிறெஸ்) ஒன்று வந்ததென்றும், கிராமவாசிகள் தம்மை அந்த வண்டியிற் பிரயாணம் செய்யும்படி ஒழுங்கு செய்யாமைபற்றி ஷெ ஸ்தானத்தலைவருடன் தர்க்கமிட்டு அவரைச் சருவமுயன்றார்களென்றும் இற்றைக்குசிலவாரங்களுக்குமுன் வெளியிட்டுள்ளோம். குறித்த ஸ்தானத்தலைவர் மாத்தளைப் பொலிஸ் கோட்டிலே கிராமிகள் அறுவர்மீது வழக்குத்தொடர்ந்தனர். அவ்வழக்கு இந்த செப்டெம்பர்மாதம் 5உ விசாரணை செய்யப்பட்டது. அப்போது எதிரிகள் தங்கள் தவறின்பொருட்டு ஷெ ஸ்தானத்தலைவரைப்பொறுதிகேட்கவும் எல்லோரும் பத்துரூபாவிகிதம் ஆபத்துக்குதவும் சங்கத்துக்குக்கொடுக்கவும் உடன்பட்டார்கள்

நூல்களைப்பற்றியகுறிப்பு.

மூன்றாந்தரப்பூமிசாஸ்திரம்.

இது யாழ்ப்பாணம் சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர் ஸ்ரீ. கா. இளையதம்பியவர்களால் மூன்றாம்வகுப்பிற் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு இயற்றப்பட்டது; பூமியைப்பற்றி விளக்கும் சில சித்திரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் பூமிசாஸ்திரம் கற்கப்புகும் மாணவர்களுக்கு அதிகபயன் கொடுக்கக் கூடியது. விலை சதம் 25. பிரதிகள் ஆசிரியரிடம் பெறற்பாலன.

இந்துநேசன் அனுபந்தம்.

இந்துநேசன் என்னும் வாரப் பத்திரிகையின் வருஷ அனுபந்தப்பிரதி ஒன்று வரப்பெற்றோம். தென்னிந்திய தேசாபிமானிகளது படங்களும் திருக்கழுக்குன்றக் கழுகுக் காட்சி ரிஷிகோபுரம் முதலியனவும், தமிழிலும் ஆங்கிலத்திலும் பல அரிய வியாசங்களும் அதிற் காணப்படுகின்றன.

கதிர்காமக்காட்சியும் கண்டுவேந்த சாட்சியும்.

இராசமன்னார்குடி இராஜா சுவாமிகள் கதிர்காம யாத்திரை செய்த சரிதமும் ஷெ சுவாமிகள் கதிர்காமத் திருச்சந்நிதியிற் பாடிய கீர்த்தனைகளும் வரையப்பட்டுள்ள இந்நூல் வெள்ளவத்தைத் திருக்குறட் பயிற்சிக் கழகத்தாரால் பிரசுரித்து வெளியிடப்பட்டுள்ளது. பிரதி ஒன்றன் விலை சதம் பத்து. பிரதிகள் ஷெ கழகத்தாரிடம் பெறற்பாலன. எமக் கனுப்பிய பிரதிக்கு நன்றியறிதலுடன் ஏற்றோம்.

தேகவியோகம்.

மண்டைதீவு திருவெண்காட்டுச் சிவன்கோவிலை ஸ்தாபித்துப் பிரதிஷ்டை செய்து கிரமமாகப் பூஜை முதலியன நடத்துவித்து வந்தவரும் கடவுட்பக்தி வாய்மை அறிவு அடக்கம் முதலிய நற்குணங்கள் பூண்டவரும் ஷெ கோவில் அதிகாரியும் யாவராலும் வியக்கத்தக்க கண்ணியமுடையவரும் ஆகிய ஸ்ரீ சுப்பிரமணியர் பொன்னம்பலம் அவர்கள் நிகழும் குரோதனவரு ஆவணிமீ 13உ வெள்ளிக்கிழமை காத்திராவண்ணம் தேகவியோகமாயினர். இவர் செல்லப்பா, தம்பையா, இராசப்பா, பார்வதிப்பிள்ளை என்னும் நால்வருக்குந் தந்தையாயுள்ளவர். அந்திய காலத்திலே இவரின் வயது 72 இவரின் பிரிவாற்றது வருந்தும் சுற்றமித்திராதியோருடன் நாமும் அநுதாபமுறுகின்றோம். கடித

மாதகல் இந்துவாலிபசங்க 'குகன்' வாசிகசாலை.

அபிமானமேயுருவெடுத்தனைய ஷெ சங்க அங்கத்தவரால் ஷெ ஊரில் சமயம், பாஷை, தற்கால நிலைக்கேற்றகல்வி, ஆகியனவற்றைப் புகட்டற்கேற்ற தமிழ் ஆங்கிலமென்னும் இரு பாஷையிலுமுள்ள 482 புஸ்தகங்களையும் பத்திரிகைகளையுமடக்கிய "குகன்" என்னும் நாமத்தையுடைய ஓர்வாசிகசாலை இந்த ஆவணிமீ 13ந்உ வெள்ளிக்கிழமை சாயந்தரம் 6 மணியளவில் திறக்கப்பட்டாயிற்று. இதன் நயத்தை விரும்பிப்பெரியோரிற் பலர் அன்று முன்வந்தனர். ஆயினும் அபிமானிகளாயும் புண்ணிய சீலர்களாயுமுள்ள மலாய்நாட்டிலும் மற்றைய தேசங்களிலும் வசிக்கும் எமதரிய அன்பர்பேருதவியையும் கோருகிறோம். எமக்கு அதிக பயனைத்தந்து வரும் ஷெ சங்கமும் வாசிகசாலையும் நீடூழி நீடித்து நிலவும் வண்ணம் சர்வலோகாதாரம் பரமேஸ்வரன் கிருபாகடாட்சம் செய்வாராக. கடித.

சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

நன்னெறி.

(முற்றொடர்).

"ஊடுபல் தழையை யருந்துதன் மான"
ஒன்றையும் முற்ற யுணராமற் பல
வித்தைகற் பதினும் விடாப்பிடி யாக
ஒருவிதக் கல்வியைத் தெளிவா யுணருமின்!
அதிஷ்டமில் லாத காலமே யாயினும்
எச்சிறு முயற்சியுஞ் செய்யா திராதீர்!
செந்நாப் புலவர் திறம்பா முயற்சி
திருவினை யாக்கு மென்று செப்பினரே.
ஈன்ற புதல்வன் இழுதையே யாயினும்
பண்போடு கற்கப் பள்ளிக் கனுப்புமின்!
அசாத்திய மான நோயே யாயினும்
மரிக்குந் துணையும் மருந்தைக் கொடுமின்!
சத்துரு வாயினுஞ் சமயமந் தரத்தில்
உம்மா லியன்ற உதவிசெய் திடுமின்!
ஒருவனைக் கண்ட வுடன்பல முகஸ்துதி
இயம்பிப் போனபி னிகழா திருமின்!
எண்ணிய உதவி புரிகிலே னென்று
வாக்குப் பண்ணி வந்தவன் கேட்குஞ்
சமையமந் தரத்திற் றட்டி விடாதீர்!
உத்தமர் கூறும் புத்திகேட் காமல்
உங்கண் மதியுறு வென்றுண ராதீர்!
அன்னை தந்தை முன்னோன் முதலிய
முந்தோர் தம்மை முனிந்துரை யாதீர்!
உற்றார் போன்ற உட்பகை யினரை
எக்கா லத்தும் நம்பா திருமின்!
வலிமையிற் சுவேத வாகன னேயினுந்
தன்புக ழெடுத்துச் சாற்றவேண் டாதீர்!
மதுவைப் பருகு மடையர்செய் சபையில்
நடுவே புகுந்து விலக்கநண் ணாதீர்!
சொல்லுமெத் தொழிலையுந் தொடங்கும்போது
பின்னு லெய்தும் பெற்றியை நன்றாய்
யோசித் தன்றி யெழும்பவுன் னாதீர்!
வித்தையிற் றாழ்ச்சி யுற்றவ ராயினும்
எமக்கா ரிணையென் றிறுமாப் புறாதீர்!
கனக வரையது மோதுகா லத்தில்
ஒல்கிய வளைவு வந்ததென் றுணர்மின்!
துட்டர்தங் கூட்டு மெட்டிமரம் போல்
உடலெலாம் விடமென் றுன்னி யகலுவீர்!
விலைமா தருக்கு வேசிக்கை முசில்போ
லியினு முள்ளம் பெய்தா தென்பதை
நன்று யறிந்து நணுகா திருமின்!
இருந்திக் கிறைபோற் செல்வமெய் திடினுந்
தீமை வழக்கமேல் செலவுசெய் யாதீர் !
நவரசஞ் செறிந்த நவீனந் தமிழாற்
செய்தநூற் பாவைச் சிதடர்தஞ் செவியில்
எக்கா லத்து மியம்பா துறைமின் !
வாசனை செறிந்த மல்லிகை மாலையின்
அருமையை மந்தி யறிந்து தரித்திடுமோ?
சத்தியம் விளங்குஞ் சைவநூல் களையே
படித்திட லன்றிப் பாதகப் புனைவைக்
கனவினு நீவிர் கற்கவேண் டாதீர்!
சிந்து நூலைப் படிக்கினுந் தீங்கேயப்
பட்டினத் தடிகள் [illegible] ரன்றே?
அப்பர்சாட் சேரை அடுத்திருந் தாலும்
அவர்படம் பெருமையை யறியமாட் டாரே!
வளைசத் தோண்டு மெலியு நாயும்
அந்தோ [illegible]!
அழகிய முத்தைக் குளிப்போர் சதங்கை
அணியாது அந்த மணியணி வாரோ!
சந்தன வனத்தில் மங்கிய கிராதர்
அம்மர வாசனை யறிந்திடு வாரோ!

(தொடரும்).

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

முத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையிலுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை ஏற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
அ பி. வல்லுவெட்டித்துறை.

(H. 37.)

ஃ "சேலம் டவியன்கள்."

உறுதியானது விலைசாசம்.
நாட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க சமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
S. இந்தியா.

(H. 40.)

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S I

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H 32

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் தப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி கெங்காதரக்கொடி கைக்கோர்வை, முகப்புக்கொடி, காஞ்சிதலைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, கைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணம், இமிடேசன் செப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம், விலாசம் தெரிவித்தால் பிறைஸ்லிஸ்டு அனுப்புகிறோம். சுடம்

தோ. வே. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம், தென்இந்தியா.

(H. 41.)

விளம்பரம்

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும் தெ 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முரசுகுத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம். மோதிரம், புதுச்சிகப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சீமை வயிரக்கற்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

எா. பிளேசெட்டி அண கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 69.)

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாரால்
பிரசுரஞ்செய்யப்பெற்ற

புத்தக விளம்பரம்.

	ரூ. ச.
முதற்பாலபாடம் (சித்திரசஹிதமானது)	க௦
இரண்டாம் பாலபாடம் ,,	கடு
மூன்றாம் பாலபாடம் ,,	உ௦
நான்காம் பாலபாடம் ,,	௩௦
ஐந்தாம் பாலபாடம்	௪௦
ஆறாம் பாலபாடம்	௫௦
கலாமஞ்சரி விளக்கத்துடன்	௭௫
கிருட்டிணன் தூது, உரையுடன்	௮௫
நமச்சிவாயமாலை, உரையுடன்...	௩
ஆத்திசூடி	௩
வெற்றிவேற்கையுரை	௩
வாக்குண்டாமுரை	௩
நல்வழியுரை	௩
நன்னெறியுரை	௩
இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)...	க௨
இலக்கண வினாவிடை...	க௦
நிகண்டு கக-வதும் க௨-வதும் ...	உ௫
திருவாதவூரடிகள்புராண மூலம் ...	உ௫
திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம்	க-உ௫
தவ்காகிதம்...	க-௦௦
கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன்	க௦
கந்தசஷ்டி கவசம்	௩
சுப்பிரமணியசுவாமி விருத்தம் ...	௩
ஆறுமுகசுவாமி விருத்தம்... ...	௩
பிள்ளையார்கதை	க௨
கதிரைமலைப் பேரின்பக்காதல் ...	க௨
பிரபஞ்சப் பெருவழக்கு	க௦
இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்?	க௦
சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு)	௬
குமணசரித்திரம் ,,	௬
பஞ்சரத்தினத் திருப்புகழ்	௩
சோமவாரவிரதமான்மியம்...	க௦
கந்தவிரதமான்மியம்	க௦
சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு)	க௫
மறைசையந்தாதி	உ௦

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்றூனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்."

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியசாஸ்திர கான்பரன்ஸ் அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர) தேகஔஷதங்களுக்கு தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்ற

உலகம் புகழ்வது

1st CLASS GOLD MEDAL AWARDED TO C. MALAYAPPA SAMI PILLAI PALNI
BY TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION MADRAS 1923
AWARDED 1st CLASS TO C. MALAYAPPA SAMI PILLAI PALNI
BY TAMIL MEDICAL CONFERENCE AND EXHIBITION HELD IN MADRAS 1923

உள்ள நாளும் மறவாதது

பழனி, சி. எம். சாமி

மகாவீரிய தங்கபஸ்பம்.

பரிக்ஷித்துப் பலனுக்கும் உத்தரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகல வியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது ஒருமுறை பரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபாரசக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையுங் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதையும் திரும்ப உண்டாக்குகிறது. மேகவியாதிகள், பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம் முலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1 மண்டலம் 48 நாள் பஸ்பம் ரூபா 20, அரை மண்டலம் 24 நாள் பஸ்பம் ரூபா 10.

பழனி, சி. எம். சாமி உத்தரவாதம் **குருபஸ்பம்** க்ஷய,காசரோக சஞ்சீவி உள்ளது.

இப்பஸ்பம் நமது குரு பெரிய மகானவர்களால் உபதேசிக்கப்பட்டது. இவ்வியாதிக்கென்றே தயார்செய்தது. க்ஷயம், காசம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம் இவைகளைக் குணப்படுத்தி நல்ல பசி, ரத்தவிர்த்தி, பலம், சரீர இடை இவைகளைக் கொடுத்துப் பூரணசுகத்தைத்தரும்.

நாற்பதுநாள் மருந்து ரூ 40 இருபதுநாள் மருந்து ரூ 20 பத்துநாள் மருந்து ரூ 10

குருநாகபஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்பிரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ் மூலம், இரத்த மூலம், குத்தல், மூல முளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு கஷ்டப்பட்டதாயிருந்தாலும் சரி 8 தினத்தில் காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சஞ்சீவி எனலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய்ப் பரிஷ்கடையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அனுபவமானது. புட்டி ஒன்று விலை ரூபா 2.

மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், நினைத்தகாரிய சித்தி, தனலாபம், புத்திர சந்தானம், தெய்வ அனுகூலம் உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி, முதலியன நீங்கும். சத்து 1க்கு ரூபா 2 6 சத்து ரூபா 10.

ரோம சங்காரி.

ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது. தோல் கெடாது. புட்டி 1க்கு அணா 8

சர்வபடை நிவாரணி.

சகல மேகப்படை, ஊறல், பூச்சிக்கடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள் ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும். தோல் கெடாது. புட்டி 1-க்கு அணா 8.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், மற்றும் மேகரோகங்கள், நீர்க்கடுப்பு, எரிச்சல், சுத்த உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2. வி பி சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
C. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q 61 B)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனால் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்கில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது

(Y 47)

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொள்ளேகால், காஞ்சிபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரீஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y 39).

சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகாவகைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுந்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை முத்தல் ஒன்றுக்கு ரூபா உ௦. அரைமுத்தலுக்கு ரூபா க௦. கால் முத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்று,
மட்டிக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவ
நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,